# சத்தீய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

84-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1959-ம் ஆண்டு ஆனி மாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 21-ம் இலக்கம்


## அர்ச். மரியகொறெற்றி அம்மாளின் கல்லறைத் தரிசனை

— By Fr. J. Kattackel (Roma) —

இத்தாலியில் பெரியேறேபதியின் கன்னிகையும் வேதசாட்சியுமான அர்ச். மரிய கொறெற்றி அம்மாள் தான் மரணமடைந்து சிலவருடங்களுக்குள்ளேயே அகிலமுழுவதினதும் சிந்தனையை வசிகரித்திருக்கின்றாள். தனது கற்பைப்பாதுகாப்பதில்எதிர்த்து நின்று தனது ஆருயிரையே கடவுளுக்குப் பலியாக அர்ப்பணஞ் செய்தபோது அவள் இன்னுமே பன்னிருவயது நிரம்பாதவளாய் இருந்தாள். இஃது அவளின் வீரத்துவத்துக்கு எத்துணை பெரும் மகத்தான ஓர் எடுத்துக்காட்டு! இன்றைய நவநாகரீக உலகிலே புனித வாழ்க்கைக்கு என்ன சிறந்த ஓர் தூண்டுகோல்!!

நெத்தூனு பட்டினத்திலுள்ள மரியகொறெற்றியின் கல்லறையைத் தரிசிக்கும் ஓர்நல்ல சந்தர்ப்பம் சமீபத்திலே எனக்குக்கிடைக்கலாயிற்று. அவள் வசித்திருந்த இல்லத்தையும் நாம்தரிசித்தோம். இங்குதான் அவள் வேதசாட்சியாக மரணமடைந்தாள். இந்த யாத்திரையின் இன்பகரமான ஞாபகங்களை நான் ஒருபோதுமே மறக்கமுடியாது. சென்ற மாசி மாதம் 22-ந் திகதி சனிக்கிழமை அதிகாலை ரோமைநகரிலிருந்து நெத்தூனேவுக்கு எமது பிரயாணத்தை ஆரம்பித்தோம். நாம் இந்திய குருமார் நால்வரைக் கொண்ட ஓர் குழுவினராயிருந்தோம். ரோமை நகரிலிருந்து ஒஸ்தியாவுக்குள்ள தூரம் முப்பதுமைல் வரையிலாகும். ஒஸ்தியாவுக்குச் செல்லும்வீதி மிகச் சிறந்தவொன்றாகும். அதன் இருமருங்கும் யூக்கலிப்துஸ் எனப்படும் பயின்மரங்களும், மற்றும் நிழல்மரங்களும் வரிசையாக அமைந்திருந்தன. ஒரு சொற்பவேளையிலே நாம்ஒஸ்தியாபோய்ச் சேர்ந்தோம். இது கடற்கரையிலுள்ள ஓர் சிறிய பட்டினம். தைபர்நதியின் முகத்துவாரத்தில் உள்ளது. இது ரோமைநகரின் புராதன துறைமுகமாய் இருந்து வந்தது. கடல் பெருக்கெடுத்து அதனால் உண்டாகின்ற பேரலைகளின் தாக்குதல்களைச் சமாளிக்கும்படியாகப் பலம்பொருந்திய "காங்கிறீற்" மதில்களால் இதன் கடற்கரை நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

கோடைகாலத்திலே கடற்கரைப்புறமாக விடுமுறையைக் கழிக்கிறதாயிருந்தால் நமக்குத் தேவைப்படும் ஒவ்வோர் பொருளையும் இங்கே நாம் பெற்றுக் கொள்ளலாம். கடலுக்குச் சமீபமாகவுள்ளநிலம் அதிகம்செழுமை வாய்ந்தது. திராட்சைத் தோட்டங்களிலும், மற்றும் செடிகொடிகள், விருட்சங்களிலும் எப்பொழுதுமே பச்சைப்பசேலெனக் காட்சியளிக்கின்றது. ஒஸ்தியாவிலே ஒருவர் வாக்கினால் வர்ணிக்கமுடியாத இயற்கையின் எழிலை உள்ளபடியே சுகித்து இன்புறலாம். அர்ச். அகுஸ்தீனரைப்பற்றிச் சொல்லப்படும் அந்த விநோதகரமான சம்பவம் — அதாவது கடற்கரையிலுள்ள ஓர்சிறுகுழிக்குள் சமுத்திரநீரை அள்ளிஊற்றிச் சமுத்திரத்தையே வற்றச்செய்ய முனைந்து ஒருபாலியனின்வடிவில் ஒரு சம்மனசு காட்சியளித்த சம்பவம்—இங்கே ஒஸ்தியாவில்தான் நிகழ்ந்ததென்று சொல்லப்படுகிறது.

இங்குநாம் கண்டுகளித்த விசித்திரகாட்சிகளால் மனோற்சாகம் அடைந்தவர்களாய் நெத்தூனேவுக்கு எமது பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்தினோம். ஒஸ்தியாவிலிருந்து நெத்தூனேவுக்குள்ள தூரம் 40 மைல் வரையிலாகும். கடற்கரைநீளம் வீதி செல்லுகின்றது. எமது வலப்புறத்திலே பொங்கியெழுந்து அலைமோதிக்கொண்டிருந்த கடலின் தோற்றம் நமக்கு அச்சத்தை உண்டுபண்ணியது. இடப்புறத்திலே இயற்கைஎழில் எம்மை நோக்கி இன்பகரமாகப் புன்னகை செய்வதாய் இருந்தது

இங்கே நாம்கண்டவைகள் எல்லாவற்றிலும் அத்துணை பெருஞ்சோபையாகப் பிரதிபலித்த சிருட்டிகர்த்தாவின் செளந்தரியத்தை உள்ளூற நினைந்து ஆச்சரிய வசத்தரானோம். அதனால் நாம் "இறைவனே! உமது திருக்கரங்களின் வேலைப்பாடுகள் எவ்வளவு அற்புதமானவை!" என்று சொல்ல வியோற்காரஞ் செய்யப்படலானோம். நாம் கண்ட ஒவ்வொன்றுமே அத்துணை இன்பமாயும், மனோகரமாயும் இருந்தது. அத்துணை ஆனந்தமயமாயும், மகிழ்ச்சியூட்டுவதாயும் இருந்தது.

அப்பால் ஒருசிறிது வேளையின் பின் நாம் நெத்தூனேவை அடைந்தோம். இந்தச் சிறியபட்டினமும் அதேகடற்கரையில்தான் அமைந்துள்ளது. இங்கே கடற்கரைக்கு அதிகஞ்சமீபமாய் மகா அலங்காரமான ஒரு மகாதேவாலயத்தைக் கண்ணுற்றோம். இது அர்ச். மரியகொறெற்றிக்கு மகிமையாய் நவமாகக் கட்டியெழுப்பப்பட்டது. அழிவுக்குரிய அவளின் புனித உடல் ஒரு கண்ணாடிப் பேழையிலே பிரதமபலிபீடத்திற்குச்சமீபமாய் இங்குதான் பூச்சியமாக வைத்துக் காப்பாற்றப்படுகிறது. வருடந்தோறும் எண்ணிறந்த யாத்திரிகர்கள் இந்த ஆலயத்தைத் தரிசித்து, இந்தச் சிறிய அர்ச்சியசிட்டவளை மனோவேகத்துடன் மன்றாடிவருகின்றார்கள்.

(தொடரும்)

## சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரி

### முத்திப்பேறுபெற்றபட்ட விசாரணை

தேவ ஊழியக்காரியான சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரியின் முத்திப்பேறுபெற்ற பட்டத்துக்கும், அர்ச்சியசிட்ட பட்டத்துக்குமாக நடைபெற்றுவந்த மேற்றிராசன விசாரணை பூர்த்தியாகிக்கொண்டு வருகிறது. தேவன் சித்தங்கொள்வாரானால் மேற்றிராசன நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் 1960-ம் ஆண்டு முடிவாகுமுன்னரே ரோமாபுரிக்குச் சமர்ப்பிக்கப்படும்.

### முதலாவது நீதிமன்றம்

இந்த விசாரணைக்கான முதலாவது நீதிமன்றம் 1953-ம் ஆண்டு மார்கழிமாதம் 3-ந் திகதியன்று கீழைத்தேசங்களின் திருச்சபைத் திருச்சங்க காரியதரிசியான கருதினால் ஈயூஜின் திசரான் ஆண்டவரின் சமுகத்திலே பாலாய்நகர் மேற்றிராணியாரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்தின்வேலை சங். அல்போன்ஸா எழுதியுள்ளவைகளை உண்மையென்று உறுதிப்படுத்துவதே. ஆனால், அவள் எந்தவொரு புத்தகத்தையோ, அன்றேல் நூலையோ எழுதியவள் அல்ல. அதனால், நீதிமன்றம் ஒருசில கடிதங்களையும், அவளின் ஆத்மீக சம்பந்தமான தினசரிக்குறிப்பையுமே பரிசீலனை செய்தது. இந்தப் பரிசீலனை 1955-ம் ஆண்டு பூர்த்தியடையலாயிற்று.

### இரண்டாவது நீதிமன்றம்

சங். அல்போன்ஸாவின் பரிசுத்ததனம், புண்ணியங்கள், புதுமைகளின் கனகாத்திரம் சம்பந்தமாய் அறிவுறுத்தும் இந்த நீதிமன்றம் 1955-ம் ஆண்டு மாசி மாதம் 11-ந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது எல்லாமாக இதுவரை மூன்றுமுதல் நான்குமணி நேரம்வரையில் 630 கூட்டங்கள் நடத்தியும், 90 சாட்சிகளை விசாரணைசெய்துமிருக்கின்றது. அவர்களின் வாக்குமூலங்கள் மலையாளபாஷையிலே எண்ணாயிரத்துக்குமேற்பட்ட பக்கங்களிலே அடங்கியிருக்கின்றன. இந்த நடவடிக்கைகளை லத்தீன்பாஷையில் மொழிபெயர்க்கும் வேலையும் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. இந்தநீதிமன்றம் இதுவரை இரு புதுமைகள்பற்றிய வாக்குமூலங்களைப் பதிவுசெய்திருக்கிறது. சமீபத்திலே இன்னும் குறைந்தபட்சம் நான்கு புதுமைகள் பதிவுசெய்யப்படலாம். தற்போது நடைபெறும் விவாதங்களிலே உத்தியோகபூர்வமான சாட்சிகள் விசாரணைசெய்யப்பட்டு வருகிறார்கள். இந்தச் சாட்சிகளின்பின் மேலும் நான்கு புதுமைகள் ஆராயப்படும். இவ்வாறாய் முன்சொன்ன அறிவுறுத்தும் விசாரணை நீதிமனறம் ஓர் முடிவுக்கு வரும்.

### மூன்றாவது நீதிமன்றம்

அதன்மேல் வணக்க வழிபாடு நடைபெறவில்லைஎன்பதுசம்பந்தமான நீதிமன்ற விசாரணை நடந்தேறும். அதாவது, திருச்சபை அதிகாரிகள் அறிந்தமட்டிலே சங். அல்போன்ஸாவுக்குத் தகாத விதமான மகிமையோ அன்றேல், வணக்க வழிபாடோ அருளப்படவில்லை என்பது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இயற்கையிலே இது குறுகிய நடவடிக்கையாய் இருக்கும். இதுவும் பூர்த்தியானதும் மூன்று நீதிமன்றங்களினதும் சகல நடவடிக்கைகளையும் கொண்ட லத்தீன் கையெழுத்துப் பிரதிஒன்று நீதிபதிகளின் கடிதங்களுடனும், சிபாரிசுக் கடிதங்களுடனும் சேர்த்து, முத்திரையிட்ட உறை ஒன்றில் வைத்து ரோமாபுரிக்கு அனுப்பி வைக்கப்படும். இது முத்திரை பழுதுறாது திருச்சடங்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# அர்ச். சூசையப்பரின் அப்போஸ்தலர் அந்திரே பிறதர்

(முன் தொடர்ச்சி)

நன்றாகச் செபிக்கவேண்டுமாகில் சிலுவையில் அறையுண்ட நமது திவ்விய இரட்சகராகிய யேசுநாதரில் நாம் நினைவாக இருத்தல்வேண்டும். சிலுவையில் தொங்கும் திவ்விய சகோதரரைச் சிந்தித்துக்கொண்டு பராக்குக்கு இடங்கொடுப்பது எங்ஙனம் என்பார்.

அறையுண்டநாதரின் திருச்சுரூபத்தை எங்கு காணினும் அதனை அன்பு கனிய நோக்கி அத்தியந்தவிநயமாக ஆசாரஞ்செய்வார். தமக்கு அறிமுகமானவோர் துரைமகன் கிருகத்துக்கு அவர் போயிருந்த சமயத்திலே "உமது கிருகம் நேர்த்தியான பனிமுட்டுகள் சீர்சிறப்பாய் நிறையப்பெற்றுளது; ஆனால், ஓர் சீர்கேடு உண்டு" என்றார். துரைமகன் உடனே பிறதரை நோக்கி: "தயவுகூர்ந்து அது யாதெனத் தெரிவித்தருளும்" என, சுவரிலே தூக்கப்பெற்றிருந்த அறையுண்ட திருச்சுரூபத்தைச் சுட்டிக்காட்டி, "ஒரு மூலையிலே அதனைத் தொங்கவைத்திருப்பது பெரும் பிழை; யேசுநாதசுவாமிக்கு முதன்மையானஇடம் கொடுக்கப்பட்டில்லையே" என்றார்.

சுத்த இன்மையிலேநின்று நம்மைப் படைத்து உருவாக்கியதிலே, நமது நீசமனுஷீகத்தை அணிந்து மனுஷனாக அவதாரஞ்செய்ததிலே, நமக்காகச் சொல்லொணாச் சந்தாபமும், நிந்தையும், வாதையும் அநுபவித்துச் சிலுவையிலே அறையுண்டு கடினமரணம் அடைந்ததிலே விளங்குந் தேவஅன்பிலும், வாகாமகோசர மகாஅற்புதமான தேவநற்கருணையை ஏற்படுத்தியதிலே விளங்குந் தேவஅன்போ மானிடயுக்திக்கு எட்டாத மகாமீசுரமானதாய் இணையீடின்றி விளங்குகின்றதென்பது வேதவித்தியாபாரகர் அனைவருக்கும் ஒத்ததுணிபான ஓர் சத்தியம். தேவஞானத்திலே துலக்கப்பட்ட புத்தியையுடைய சுத்த தபோதனரான அந்திரேபிறதர் இச்சத்தியத்தை உற்றுணராதிருந்திருப்பாரா? உணர்ந்திருக்கின் திருப்பாடுகளின்மேல்அத்துணை உருக்கமான பத்திகொண்டிருந்தவர், பரமதேவநற்கருணைமேல் எத்துணை உருக்கமான பத்திகொண்டிருந்திருப்பாரென நாம் எளிதிலே ஊகித்துணர்ந்துகொள்ளலாமன்றோ!

திவ்விய பூசைப்பலியானது சிலுவைப்பலியின் புதுப்பித்தலாகவிருக்க, தேவஇரட்சாநாதரின் திருப்பாடுகளையுந் திருமரணத்தையும் அவரது இரண்டாம் வருகைவரையும் மனிதருக்கு இடையறாது நினைப்பூட்டிக்கொண்டு வருவதாகவிருக்க, (1. கொரி. XI) பரமதிரித்துவத்துக்கு அளவிறந்த மகிமைத்தோத்திரமும் பரமபூசித ஆராதனையும் அல்லும்பகலுஞ் செலுத்துவதாகவிருக்க, தேவநீதிக்கோபத்தை அமர்த்தி, நரகப்பிசாசுகளின் கொர்ச்சிதவலிமையை அடக்கி உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களின் வேதனையைச் சித்திரமாகத் தணித்து, திருப்பாடுகளின் கரைவரையில்லாப் பெறுபேறுகளின் கனியான அருட்பிரசாதவானமிர்தத்தைப் பூலோக மனுமக்கள்மேலே அகோதாரையாக வருஷித்துவருகிறதாகவிருக்க, அத்தெய்வீக பூசாபலியை அந்திரேபிறதர் வெறுந்தளத்திலே முழந்தாளிட்டு ஆழ்ந்த பூச்சியபத்திமையோடே அசைவறத் தம்பித்தமேரையாகநின்று ஒப்புக்கொடுத்துவந்தமை ஆச்சரியமல்லவே.

"ஓ! பரிசுத்த தேவதூதரே! பரமண்டலத்திலே நீங்கள் தேவதிருச்சந்நிதியாலேஊடுருவப்பெற்றிருக்குமாறு, பலிபீடத்தில் எழுந்தருளியிருக்கும் தேவனது திவ்விய சந்நிதானத்தாலே அடியேன் பூரிக்கப்பட்டிருக்கும்படி எனக்கு அநுக்கிரகம் அடைந்து தந்தருளுவீர்களாக" என்று பூசைஆரம்பமாகுமுன் சொல்லி மன்றாடி வரும்படி பிறரை ஏவிவருவார்.

உத்தமமேரையாகப் பரிசுத்த பூசைப்பலியைக்கண்டு குருவானவருடனே ஒன்றித்து ஒப்புக்கொடுத்தற்கு முக்கியமாய்க் கவனித்து அநுட்டிக்க வேண்டியவற்றுள் ஒன்று திவ்வியநன்மை உட்கொள்ளுவதே. முதன்முதலாகத் திவ்விய சற்பிரசாதம் உட்கொண்ட நாள்முதல் இவ்வநுசாரத்திலே நம் தருமசீலரான துறவி பெரிதும் வாலாயப்பட்டிருந்தனர். அவரைப் புதுநன்மைக்கு ஆயத்தப்படுத்திய குருப்பிரசாதி தேவகைத்தாதைமீது நேசமிக்குள்ளவராயிருந்தமையால் சற்பிரசாதநாதர் பக்தியோடு சஞ்சூசையப்பர் பக்தியையும் அவருக்கு ஊட்டியருளினார். சஞ்சூசையப்பர் திவ்வியபாலனைக் கரிசனைகவனமாகப்பேணி ஆதரித்துவந்தபான்மையாக, தம்மிடம் திவ்வியநன்மைவழியாக எழுந்தருளிவந்த தமது இஷ்டப்பிரசாத ஆத்துமத்தில் என்றும் பிரசன்னமாயிருக்குந் தேவசுதனை நினைவுகூர்ந்து தமது புலன்களைக் கட்டிக்காத்து அவரைத் தாம் இழந்துவிடாதிருக்குமாறு எச்சரிக்கை சாவதானமாக இருந்துவருவார்.

திவ்விய நற்கருணைப் பக்தியினதும் அதனை உட்கொள்ள அவருக்குள்ள வேகரமான ஆசையினதும் மேலீட்டால் அதனை அனுபவிக்குஞ்சமயம் நெருங்கிவந்ததும், அவருடைய முகாரவிந்தம் மலர்ந்து செந்தளிர்ப்பும், மினுமினுப்புங்கொண்டு துலங்க, பூசகரான குருப்பிரசாதி நடுநடுங்குங் கரத்தோடேயே அவருடைய நாவிலே திவ்விய சற்பிரசாதநாதரை எழுந்தருளச் செய்வாராம்.

"நெடுநாளாக அன்னபானஞ் செய்யாதிருக்கின், நீ சீவிக்கக்கூடுமா? உனது ஆத்துமபோசனமாகிய திவ்வியநன்மையை உட்கொண்டுவாராவிடில் தேவஇஷ்டப்பிரசாத அந்தஸ்திலே நெடுங்காலம் நீ நிலைநிற்க முடியுமா?" என்று புத்திகூறி அடிக்கடி நன்மைவாங்கும் வழக்கத்தை ஊக்கித்துவருவார்.

ஒருமுறை நமது துறவி தம்மைத் தரிசிக்கவந்த ஒருவரைவிழித்து: "நீர் சருவேசுரனை நேசிக்கிறீரா?" என்று வினவ, அவர் அரைமனம் இருமனமாய் "ஆம்" என்றார். "நேசத்தின் எவ்அடையாளங்களை அவருக்குக்காண்பித்துவருகிறீர்? உதாரணமாக; எவ்வளவடிக்கடி நன்மைவாங்கி வருகிறீர்? வாரத்துக்கொருமுறையா? மாசத்துக்கொருமுறையா?" என்றுமீளவும்வினவினார். தரிசகர்: "இருந்திட்டெப்போதாவது ஒருமுறை வாங்குகின்றேன்" என உத்தரங்கொடுக்க, அவர் மாறுத்தாரமாக: "உமக்கு ஒருஉற்றமித்திரர் இருக்கின், அவரைக் காணப்போகாது அவருக்கு உமது சிநேகத்தின் அறிகுறி யாதொன்றுமே காண்பிக்காது, அவருக்கு என்ன சொல்வதென்று தெரியாத அறியாமை பிடித்தவராய், பலவாரங்கள் பலமாசங்கள் கழிந்துபோக விட்டுக்கொண்டிருப்பீரா? எங்களை ஈடேற்றுவதற்காகச் சிலுவைமரத்திலே பலியாகி மரணித்த யேசு இரட்சகருக்காக என்ன மனப்பலியை அல்லது தற்பரித்தியாக முயற்சியை ஒப்புக்கொடுத்து வருகிறீர்? ஆ! நாங்கள் எங்கள் சருவேசுரனை உண்மையாகவே நேசிக்கக்கிடைத்தாலோ!" என்று கண்களிலிருந்து கண்ணீர்முத்துக் கன்னம்இரண்டாலும்உருண்டுருண்டுவிழ உரையாடினர்.

(தொடரும்)

# துன்பத்திலே பூக்கும் இன்பம்

— பி. ஏ. தாஸ் —

மலர்களைத்தழுவி அறையினுள் வீசிய மெல்லியபூங்காற்றில் மெய்சிலிர்த்து நிமிர்ந்தாள்அவள். அன்று அவள்முகத்தில் வேதனைரேகைகள் பாவியிருந்தாலும், அவள்விழிகளில் அசாதாரண ஒளிவீசியது. அவள் நெஞ்சிலே வியாகுலத்தாயின் சிறிய படமொன்று தவழ்ந்துகிடந்தது. பக்கத்துக் கட்டில்களிலுள்ள பலநோயாளிகள் எழுப்பிய இருமல் ஒலிதானும் அவள்சிந்தனையைத் தடைசெய்யவில்லை.

அப்பொழுது டக்றர்வில்லியம்வரும் காலடிச்சத்தம்கேட்டு நோயாளிகளெல்லாம ஆவலாகக்கண்விழித்துஎழுந்தார்கள். கருணையேவடிவான டக்றர் வில்லியத்தின் பரிவானசிகிச்சைஒன்றே எல்லோரையும் மருந்தைவிடமயக்கும் அருமருந்தாக இருந்தது.

சிறுவயதிலேயே தாயைஇழந்தவர் டக்றர்வில்லியம். மிகவும் கஷ்டப்பட்டுப் பிறர்உதவியால்படித்து முன்னேறியவர். பிறருக்குத்தொண்டு செய்யவே டக்றர்தொழிலை மேற்கொண்டஅவர் அனாதைஏழைகளின் அன்பராக எல்லோரதுஇதயங்களிலும் பரிமளித்தார். அந்தமாவட்டமமுழுவதும் அவரது சனிவானசிகிச்சைமுறை பிரசித்திபெற்றிருந்தது.

புதிதாகஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்ந்திருந்த ஓர்மத்திபவயோதிகஸ்திரீயின் விசித்திரபோக்குத்தான் அவருக்குப் புரியாதபுதிராயிருந்தது. தாயைஇழந்த அவருக்கு அவள்மீது ஓர்சிறப்பானபற்று அவரையும்மீறி எழத்தான்செய்தது.

"ஏனம்மா, நான் எவ்வளவுகூறியும் இதற்கு இணங்கமாட்டேன் என்கிறீர்கள். மோர்பியா (Morphia) இன்ஜெக்ஷன்கொடுத்துச் சத்திரவைத்தியஞ்செய்தால் நிச்சயம் குணமாகும், அம்மா?" என்று அவர் எவ்வளவோ கெஞ்சினார்.

"டக்றர் தயவுசெய்து வேண்டாம். மன்னியுங்கள். நான் குணமாகலாம். ஆனால், அது இயற்கையாகஏற்பட்டால் ஆண்டவனுக்கு நன்றியறிந்ததோத்திரம் செய்கிறேன். என்பாவத்திற்குப் பிராயச்சித்தமாக நான்அனுபவிக்க வேண்டியிருக்கிறதே? என் ஒரேமகன் — அவன் நடத்தை? அவன்பாவத்திற்கு நான் பரிகாரம்செய்ய வேண்டாமா? அவனுக்காக—அவன் பாவவாழ்க்கையிலிருந்து பரிசுத்தவாழ்வில் திளைப்பதற்காக நான் அனுபவிக்கிறேன். இதுவே எனக்குத் துன்பத்தில்பூக்கும் இன்பமாகும். அன்புகூர்ந்து என்னைத் தொந்தரவுசெய்யாதீர்கள்?"

இந்தவிசித்திரப்பதிலால் டக்றர்வில்லியம் சிலையாகிவிட்டார். அவர் தனது வாழ்நாளில் எத்தனையோநோயாளிகளுடன் பழகியிருக்கிறார். இதுபோன்ற தாழ்மையின் மென்மை உணர்ச்சியை அவர்பார்த்ததில்லை. "துன்பத்திலே பூக்கும்இன்பம்! இந்த வார்த்தையிலே பொதிந்திருக்கும் அர்த்தத்தை அவர் நினைக்கநினைக்க அநேககாட்சிகள் சலனபடம்போல அவர் விழிகளிலேபடர்ந்து ஓடஆரம்பித்தன.

"அனல்கக்கும்வெயிலிலே இரத்தம் வியர்வைரூபத்தில்சிந்தத் துடிக்கும் சிவனுடன் கருங்கல்லை உடைக்கும் பாட்டாளிப் பெண்மணி—அவள் கண்களிலே பூக்கும் இன்பம்—கிடைக்கும் ஊதியத்திலே அலறித்தவிக்கும் குழந்தைக்குப் பால் கொடுக்கலாம் என்ற மனக்கனிவு!"

"பாட்டாளிமகன் பகல்முழுவதும் உடல்தேய உழைத்து, மாலையில் கால் வயிற்றுக்கஞ்சிக்கும் போதாக் கூலி பெற்றும் அவன் முகத்திலே சாந்தி நிலவுகிறது, தன் குழந்தை குட்டிகளுக்கு ஏதோ கொஞ்சம் கஞ்சியாவது கொடுத்து அவர்களின் இன்முகத்தைக் காணலாமென்று!"

"தேசியக் கொடியைக்காக்கத் தன் உயிரைப் பலிகொடுக்கிறான் எதிரியிடம் ஓர் தேசிய வீர இளைஞன். துன்பத்திலும் வெற்றியின் இன்பசாந்தி அவன் முகத்திலே நிலவுகிறது!"

பெருமூச்சுவிட்ட டக்றர் வில்லியம் தலை குனிந்தபடியே தன் அறைக்குப் போனார். அவர் போவதை இமை கொட்டாது பார்த்தபடி இருந்தாள் அவள். தாய்ப்பாசம் அவள் இதயத்திலே அலைகளாகப்பொங்கி அவள்விழிகளில் நீர்த்துளிகளாக வெடித்துச் சிதறின.

பணக்காரவம்சத்தில் பிறந்த பிலோமினா பி. ஏ. வரை படித்தாள். படிக்கும்போதே அவள் பருவநெஞ்சில் சுதந்திர தேசிய போராட்ட உணர்ச்சி கிளர்ந்து எழுந்து, பெண்கள் சேவா படையில் சேர்ந்தாள். அவள் இலட்சியத்துக்கேற்பப் பொது மேடைகளில் அன்னியரை எதிர்த்துச் சொற்போர் மன்னனாக விளங்கிய ஜோர்ஜ் என்ற வாலிபரை — தன்னுடன் கல்லூரியில் படித்த சகமாணவரைப் பல எதிர்ப்புகளிடையே கடிமணம்புரிந்தாள் பிலோ.

இன்பம்கமழ்ந்த அவர்களின் குடும்ப வாழ்வை மேலும் சுவைப்படுத்த ஓர் ஆண்மகவு பிறந்தது. பிலோவின் நம்புகளெல்லாம் பூரித்து விம்மின.

இடையிலே இருபது ஆண்டுகள் அநேகமாறுதல்களைத் தோற்றுவித்து ஓடிமறைந்தன.

ஜோர்ஜ் ஓர்நாள் சுரம் என்று படுத்தவன் ஒரேயடியாகக் கண்ணைமூடிவிட்டான். அவர்களது செல்வப்புதல்வன் ஜேம்ஸ் பதினெட்டுவயது நிரம்பிய கட்டழகனாக வளர்ந்துவிட்டான். நல்ல பாம்பிற்கு யார் அழகில்லை என்று சொன்னது? அவன் அழகுக்கேற்ப அவன்வாழ்வே நச்சுப்பாதையில் நடைபோட்டது.

பிலோமினாவின் தன்னலமற்றசேவையும், உயரியபண்பும் மக்களிடையே தனிமதிப்புப் பெற்றிருந்தும் மகன் நடத்தையால் அவள்பெருமை குன்ற ஆரம்பித்தது. அவள் இலட்சியமும் காற்றிலே ஊசலாடும் சூத்திரமற்ற காற்றாடிபோல் தத்தளித்தது.

செல்வத்தை எவ்வளவு கண்ணுங் கருத்துமாகக் காத்து நேர்மையாகச் செலவழித்தாளோ அதற்குநேர்மாறாக ஜேம்ஸ் விரயஞ்செய்யத் தலைப்பட்டான். பொருளும் கரைந்துகொண்டே வந்தது. பிலோவின் உடலும் அல்லல்பட்டு, முடிவில் புற்றுநோய் என்ற கொடியவியாதி அவளைப் பற்றிக்கொண்டுவிட்டது. சிகிச்சை செய்து கொள்ள அவள் விரும்பவில்லை. எல்லோரும் வற்புறுத்தியதின்பேரில் பெரியஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகப் போய்ச்சேர்ந்தாள் அவள்.

அவளுக்குத்தெரியும் இது கடவுளின் சோதனை என்று. மகனின் பாபகாரியத்திற்குப் பிராயச்சித்தமாகத் தன்வியாதியைச் சந்தோஷத்துடன் வரவேற்று வளர்க்கவேண்டுமென்று! அதில்தான் துன்பத்திலும்மலரும் இன்பம் இருக்கிறது — மனுவுக்காக மனுமகன் தனது உயிரைப் பலிகொடுத்தது போல.

தாய்நிலைகண்டு ஜேம்ஸ்வந்து எட்டியும் பார்க்கவில்லை. வலையினின்று தப்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# கத்தோலிக்க சமாச்சாரம்

## மற்ருேர் கருதினல் காலஞ்சென்ருர்

பிரான்ஸ்தேச லெமான்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் கிறென்த் ஆண்டவர் சென்ற வைகாசிமாதம் 4-ந் திகதி திங்கட்கிழமை காலஞ்சென்றதைத் தொடர்ந்து தென்னமெரிக்காவிலே கலம்பியாநாட்டின் திருச்சபை மேலதிகாரியும், கருதினல் பதவிக்கு உயர்த்தப்பெற்ற முதலாவது கலம்பியருமான கருதினல் கிறிசான்தோ லூக் ஆண்டவர் அடுத்த 8-ந் திகதி வெள்ளிக்கிழமை தமது 70-ம் வயதிலே காலஞ்சென்ருரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. இவரின் மரணத்தாலே திருச்சபைக் கருதினல்மாரின்தொகை 72 பேராகக் குறைந்திருக்கிறது. இவர்களிலே இத்தாலியர்கள் அல்லாதவர்கள் 43 பேர். காலஞ்சென்ற கருதினல் லூக்ஆண்டவர் சமூகசேவா துறையில் சிறப்பாக ஈடுபட்டுப் பிரஸ்தாபம்பெற்றவர். வானெலிப்பாடசாலைகளின் கருதினலெனச் சிறப்பாக அறியப்பெற்றவர். இவரதுகண்காணிப்பின் கீழ் துஞ்சா மேற்றிராசனத்தில் வானெலிப் பாடசாலைகள் ஆக்கப்பட்டன. அவைகள் பண்ணைகளில் வசிப்பாருக்கெல்லாம் விசேஷ கல்வியறிவை ஊட்டிவரலாயின. பிந்த இப்பாடசாலைகள் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரந்து லட்சக்கணக்கான மக்களுக்குப் பெரும்நன்மை செய்துள்ளன. இவரதுவற்புறுத்துதலின் பேரில் இவருடைய குருத்துவ மாணவர்களும், குருமாரும் சமூகப் பிரச்சினைகளிலும், அவற்றைத் தீர்த்துவைப்பதிலும் விசேஷசிரத்தை எடுத்துவந்தார்கள். சமூகப் பிரச்சினைகளைப் படித்துவருமாறு அநேககுருமாரைப் பிறநாடுகளுக்கு அனுப்பிவைத்தார். இவர் கல்பியாநாட்டிலே ரென்ஜோ எனுமிடத்திலுள்ள பண்ணையொன்றில் பிறந்தவர். 1953-ம் ஆண்டுநடைபெற்ற கருதினல்மார் திருச்சங்கத்திலே 12-ம் பத்திநாத பாப்பானவரால் இவர் ஒரு கருதினல் ஆக்கப்பட்டார்.

---

## அர்ச். வியான்னி அருளப்பரின் சுரூபம்

கூரேதார்ஸ் என அறியப்படுகின்ற அர்ச். வியான்னிஅருளப்பர் பரமபதமடைந்த நூரும் ஆண்டு நிறைவுவிழா ஆர்ஸ் எனப்படும் சிறியபட்டினத்திலே சென்றமாதம் ஆரம்பமானபோது, கூரேதார்ஸ் 1834-ம் ஆண்டு தம்முடைய கோவிலுக்கென்றுவாங்கிய தேவதாயாரின் திருச்சுரூபமானது "ஆர்ஸின் மாதா" எனும் புதிய மகிமைநாமத்துடன் கருதினல்மாரும், மேற்றிராணிமாரும் கூடியிருந்த சமூகத்தில் ஆடம்பர திருவைபவங்களுடன் திருமுடி சூட்டப்படலாயிற்று. இந்த மகிமைவாய்ந்த நாமத்தின் கீழ் தேவதாயார் அகில முழுவதிலுமுள்ள குருத்துவமாணவர், குருமாரின் விசேஷபாதுகாவலராக இருந்துவருவார். நூற்ருண்டுவிழாக் கொண்டாட்டம் புரட்டாசி 28-ந் திகதிவரை தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

## பாப்பரசரும் ஆங்கிலபாஷையும்

"ஆங்கிலபாஷையைக் கற்பதில் நாம் கடுமையாக வேலை செய்து வருகிருேம்; இன்னும் மூன்றுமாதங்களில் இங்கே திரும்பவந்தால் நாம் ஆங்கிலம் பேசக் கேட்பீர்கள்" என்று சமீபத்திலே பாப்பரசர் அமெரிக்க தம்பதிகள் இருவரிடம் கூறியதாக அறிவிக்கப்படுகிறது. சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றிலே இவ்விதம் அவர் கூறினரென்று "இற்ருலியா" என்ற இத்தாலிய செய்திஸ்தாபனம் தெரிவித்துள்ளது. வத்திக்கான் இராச்சிய மந்திரி காரியாலயத்திலே ஓர் ஐரிஷ்அங்கத்தவரான வண. தோமஸ் றையன் சுவாமியவர்களிடமே பாப்பரசர் ஆங்கிலம் பயின்றுவருகின்ருர். பரிசுத்தபிதா பிரான்ஸிய, பல்கேரியபாஷைகளை அதிகம் திறமையாகப் பேசுகின்ருர். நிற்க, சில தினங்களின்முன் ரோமைச் சங்கம்ஒன்றில் அவர் பேசியபோது, "நாம் சொல்வதை நம்புங்கள்; 'சேதியா ஜெஸ்தாத்தோறியா' என்ற சிவிகைச் சிம்மாசனத்திலே சுமந்து செல்லப்படுவதை நாம் விரும்பவில்லை; மற்றவர்களைப்போல நடந்து சென்ருல் நாம் மிகவும் சந்தோஷப்படுவோம்; ஆனல், நாம் கால்நடையாக நடந்துசென்ருல் எவருமே நம்மைக் கண்டுகொள்ள முடியாதென்று உள்ளபடியே உணருகிருேம்; அதனல் ஓர் தபக்கிருத்தியமாகக்கொண்டு சிவிகைச்சிம்மாசனத்தை நாம் உபயோகிக்கிருேம்" எனக் கூறலாயினர்.

---

## 12-ம் பத்திநாத பாப்பானவரும் மனந்திரும்பிய சினிமாநடிகரும்

திரு. காரிகூப்பர்எனப்பெயரிய ஹொலிவூட்டின் காலங்கண்ட பிரபலசினிமாநடிகர் தமது 58-ம் வயதிலே மனந்திரும்புவதற்கும், கத்தோலிக்க திருமறையில் சேருவதற்கும் முக்கியகாரணம், அவர் 12-ம் பத்திநாதபாப்பானவரைப் பேட்டி கண்டமையேயென்று தற்போது பிரசித்தமாயிருக்கிறது. இந்தச் சினிமாநடிகர் அநேகமுறை 12-ம் பத்திநாதரைச் சந்தித்திருக்கின்ருர். ரோமைநகரைத் தரிசித்தபோதெல்லாம் அவர்பாப்பானவரைக் காணமல் போனதேயில்லை. திரு. கூப்பர் அவர்கள் பாவிலுவானவர்சபைக் குருமாரிடம் வேதசத்தியங்களைப் படித்து, ஹொலிவூட்டிலுள்ள நல்லாயர் விசாரணைப் பங்கைச்சேர்ந்த வண. டேனியல் சலிவன் சுவாமியாரால் கத்தோலிக்க திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். முன்புஅவர் எபிஸ்கோப்பாலியன் புறொட்டஸ்தாந்தசபையைச் சேர்ந்தவராயிருந்தார். அவர் 1926-ம் ஆண்டு சினிமா நடிகராக ஈடுபடத் தொடங்கிச் சிலவருடங்களிலே உலகப் பிரசித்திபெற்ற சினிமாநடிகர்களில் ஒருவராக விளங்கிவந்தார்.

## குருமாரும் மரியாயின் சேனையும்

பிலிப்பைன்ஸ்நாட்டிலே ஒவ்வோர் குருவானவருடையவும் வலதுகரமென்று மரியாயின் சேனை கருதப்பட்டு வருவதாகச் சமீபத்தில் தூரகிழக்குநாடுகளைத் தரிசித்துத்திரும்பியவரும், அர்ச். கலம்பானின் பிறதேசமிஷனரிய சபையின் அதிசிரேஷ்டருமான வண. திமோத்தி கொன்னலி சுவாமியார் டபிளின்நகரிலே தெரிவித்திருக்கின்ருர். பிலிப்பைன்ஸ் தீவுகளிலே ஐயாயிரம் சேனைப் பிரசீடியங்கள் இருப்பதாகவும், திருச்சபைக்குப் பெரிதும் வீரத்துவமும், காத்திரமுமான சேவை புரிந்து வருவதாகவும் அவர் கூறுகின்ருர்.

---

## மிஷன்களும் கத்தோலிக்கரும்

உலக முழுவதிலுமுள்ள கத்தோலிக்கமக்கள் சென்றவருடத்திலே மிஷன்கள் எனப்படும் வேதபோதகநாடுகளுக்கு 60 லட்சம் பவுண் சேகரித்திருக்கின்ருர்கள். இந்தப்பணம் விசுவாசப் பரப்புதற்சபைப் திருச்சங்கத்தாலே 700 மிஷனரிய மேற்றிராசனங்களுக்குப் பகிர்ந்துகொடுக்கப்படும். 10 லட்சம் பவுணுக்கு மேல் மிஷன்களிலுள்ள 400 குருமடங்களுக்கும் பகிர்ந்து அனுப்பிவைக்கப்படும். மற்ருேர் தொகைப்பணம் ஆவசியக தேவைகளுக்கென்று — உதாரணமாகச் சூறைக்காற்று, வெள்ளப்பெருக்கு, அக்கினி முதலியவற்ருல் சேதமடைந்த மிஷன் கட்டடங்களுக்கும், கஷ்டமடைந்த மக்களுக்குமென்று ஒதுக்கிவைக்கப்படும். லொறிகள், ஜீப்கள், வள்ளங்கள் என்பனவாக விசேஷ உதவியை வேண்டிநிற்கும் மிஷன்களுக்கு மத்திய நிதி ஒன்று உதவிசெய்கின்றது.

---

## இத்தாலிய ஜனதிபதியைப் பாப்பரசர் கௌரவிக்கின்ருர்

23-ம் அருளப்ப பாப்பரசர் இத்தாலிய ஜனதிபதி குறெஞ்சி அவர்களைக் கிறீஸ்துவின்மகிமை வரிசை சன்மானித்துக் கௌரவித்திருக்கின்ருர். பாப்பரசரால் வழங்கப்படக்கூடிய மகாஉந்நதமான மகிமைவரிசை இதுவாகும். இது 22-ம் அருளப்பபாப்பானவராலே 1319-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தமகிமைவரிசையைப் பெற்றவர்களாய்த் தற்போது ஐவர் இருக்கின்றனர். பூர்பன் - லக்ஸெம்பேர்க் நாட்டின் பீலிக்ஸ்இளவரசர், இத்தாலியின் முன்னைநாள்மன்னரான 2-வது உம்பெட்ரோஅரசர், ஆஸ்திரியாவைச்சேர்ந்த டக்றர் வில்ஹெல்ம், ஸ்பானிய அரசாங்க தலைவர் ஜெனறல் பிரான்சிஸ்கோ பிருங்கோ, முன்னைநாள் இத்தாலிய ஜனதிபதி சிஞ்ஞோர் லூய்ஜி எய்ஞேதி என்பவர்களே இந்த ஐவருமாவர்.

## திரு. ஜோண்டல்லஸ் அவர்களின் குருபுதல்வர்

அமெரிக்க வெளிநாட்டு மந்திரியாகப் பிரஸ்தாபம் பெற்றிருந்து தமக்குண்டான புற்றுநோய் காரணமாகச் சமீபத்திலே தம்முடைய மந்திரிபதவியை இராசிநாமாச் செய்திருந்தவரும், சென்ற 25-ந்திகதியன்று காலஞ்சென்றவருமான திரு. ஜோண் பொஸ்றர் டல்லஸ் அவர்கள் பிறெஸ்பிற்றேறியன் சபையைச் சேர்ந்த ஓர் புறொட்டஸ்தாந்த கிறீஸ்தவர். இவருக்கு இருபுதல்வர்கள் இருக்கின்றனர். அவர்களில்ஒருவர் திரு. ஜோண் வாட்சன் டல்லஸ். இவர் மெக்சிக்கோவிலே மொண்ரெறே நகரில் வசிக்கின்ருர். மற்றவர் யேசுசபையைச்சேர்ந்த வண. அவெறி டல்லஸ் சுவாமியார். இத்தாலியிலே வேதசாஸ்திரம் படித்துக்கொண்டிருந்த இவர் தமதுதந்தையாரின் சுகத்தாழ்வைப்பற்றி அறியவந்ததும் சென்ற வைகாசி மாத ஆரம்பத்திலே இத்தாலியிலிருந்து விமான மார்க்கமாய் நியூயோர்க்நகர் போய்ச்சேர்ந்து உடனேதானே வாஷிங்ரன் நகருக்குப் பிரயாணஞ்செய்து அங்கே வால்றர்றீட் ஆஸ்பத்திரியில் இருந்துவந்த தம்முடைய தந்தையாரைப்போய்ச் சந்திக்கலாயினர். தந்தையாரின் மரணத்தின்போதும், அவரின் பூதவுடல் அடக்கத்தின்போதும் இவர் தம்முடைய தாயாரோடும், ஏகசகோதரனேடும், ஏக சகோதரியோடும் சமூகமாயிருந்தார். தந்தையார் தமதுமரணசாதனத்திலே தம்முடைய குருபுதல்வருக்கும் 5,000 டலர் எழுதிவிட்டிருக்கின்ருர். இதுவிஷயமாய் அவர் விளக்கங்கொடுக்குமிடத்து, "நான் அவருக்கு இன்னும்அதிகம் எழுதாத காரணம், அவரில் கொண்டுள்ள அன்புக் குறைவோ, அல்லது நம்பிக்கைக் குறைவோ அல்ல; ஆனல், அவர் விஷயமாய் ஏற்பட்டுள்ள விசேஷ சங்கல்பங்கள் இன்னும் ஏதும் பணம்எழுதுவது பொருத்தமற்றதும், அவசியமற்றதுமெனக் காணப்படுவதே" எனத் தெரிவித்திருக்கின்ருர்.

---

## லூர்துபதிக்குச் சமாதான திருயாத்திரை

இரண்டாவது உலகயுத்தத்தின் 20-ம் ஆண்டுநிறைவு ஞாபகார்த்தமாக வருகிற ஆவணி மாசம் 30-ந் திகதியிலிருந்து புரட்டாசிமாதம் 5-ந் திகதிவரையிலே பிரான்ஸிய பட்டாளங்களில் சேர்ந்து போராடிய குருமார்சங்கத்தால் அணிவகுக்கப்பெற்ற யாத்திரைஒன்று லூர்துபதிக்கு நடந்தேறவிருக்கின்றது. லூர்து திருப்பதிக்குச் சமாதான யாத்திரைஒன்றில் கலந்துகொள்ளுமாறு நேசநாடுகளைச் சேர்ந்தவர்களும், சத்துருநாடுகளைச் சேர்ந்தவர்களுமான முன்னைநாள் போர்வீரர்களுக்கெல்லாம் பிரான்ஸின் உயர்தர வரிசையைச்சேர்ந்த போர்வீரரான மாஷல் ஜூயின் மனுப்பண்ணியிருக்கின்ருர். 70,000 முன்னைநாள் போர்வீரருக்குமேல் இந்த யாத்திரையில் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

மடு விடுதலை

கத்தோலிக்க பாடசாலைகளின் 1959-ம் ஆண்டுக்குரிய விசேஷ விடுதலை நாட்களுடன் கீழேதரும் திகதிகளையும் சேர்த்துக்கொள்ளவும்.

ஆனி 29 தொடக்கம்
ஆடி 3 முடிய மடு விடுதலை.

PHILIP PONNIAH,
Gen. Manager of R. C. Schools.
Jaffna, 29-5-59.

சத்திய வேத
பாதுகாவலன்
1959-ம் ஆண்டு
ஆனிமாதம் 4-ந் திகதி

# உதவிபெறும் பாடசாலைகள்

அரசாங்கத்திலிருந்து உதவி பெறும் சகலபாடசாலைகளையும் அரசாங்கம் எடுத்துநடத்த வேண்டுமென்று இந்நாட்டின் பெரும்பான்மைச் சாதியத்தவரான புத்தர்களிலே ஒருபாலார் நிற்கின்றனர். மறுபாலாரோ உதவிப்பணம்பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துநடாத்தப்படாதெனச்சாதித்துநிற்கின்றனர். ஆனல், உதவிபெறும் பாடசாலைகளின் முகாமைக்காரர் விரும்பினல்மட்டுமே அந்தப் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தவேண்டும் என்பது மந்திரிசபைசெய்துள்ள தீர்மானமாகும். பெரும்பான்மையினரான புத்தர்கள் இவ்விதம் கருத்துவேற்றுமைகொண்டு இரண்டுபட்டுநிற்கும்போது அரசாங்கம்செய்துள்ள தீர்மானம் ஓரளவில் நீதியானதென்றே கொள்ளவேண்டியிருக்கிறது. புத்தபிரம்மஞானசபை, புத்தமகாபோதிச்சபை, புத்தகல்விச்சபையாகிய மூன்றினதும் பிரதிநிதிகள் — அதாவது உதவிபெறும் புத்தபாடசாலைகளில் பெரும்பான்மையானவற்றைக் கொண்டு நடத்துகின்ற மூன்று சபைகளினதும் பிரதிநிதிகள் சென்றவெள்ளிக்கிழமை ஓர்மகாநாடுகூடி, அதிலே உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கப்படாதென்று கண்டிப்பாகக் கேட்பதெனத் தீர்மானித்திருக்கின்றார்கள். அவர்களிலே புத்தகல்விச்சபையைச் சேர்ந்த கனம். இந்துறுவே பன்னதிசதேரோஎன்ற புத்தகுரு பேசியபோது, "புத்தபாடசாலைகளை அரசாங்கம் எடுக்கிறதானல் அது இலங்கையிலே புத்தகல்வி இறுதியடைவதின் ஆரம்பமாயிருக்கும்; புத்தகல்வி அரசாங்கத்தினல் அல்ல, புத்தர்களாலேயே ஊட்டப்படவேண்டும்"எனக் கூறியிருக்கின்றார்.

உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்கவேண்டுமென்று அகில-இலங்கைப் புத்தகாங்கிரஸ் வலிந்துகேட்பதைப் பிரதிநிதிகள் கண்டனஞ்செய்தனர். புத்தகல்வியைப்பற்றிப் புத்தகாங்கிரஸ் தலைவர்கள் அதிகமாகப் பேசிவந்தபோதிலும் திரு. பி. டி. எஸ். குலரத்தின ஒருவர் நீங்கலாக வேறெவராவது ஒரேயொரு புத்த பாடசாலையைத் தானும் அமைத்ததுகிடையாதென மகாநாட்டிலே சொல்லப்பட்டது. புத்தகம்மிஷன் அறிக்கைபற்றிக் கனம். பன்னதிசதேரோ குறிப்பிட்டபோது, எம். ஈ. பி. அரசாங்கம் இந்தஅறிக்கையை ஏற்றுக்கொண்டபோதிலும் சென்ற பொதுத்தேர்தலிலே உதவிபெறும் பாடசாலைகளைஎடுத்துக்கொள்வதுஓர்திர்மானமாய் இருக்கவில்லை என்றார். ஈற்றில் தங்கள்கருத்துகளை ஓர் பிரேரணையாகப் பிரதமருக்கு அனுப்பி வைப்பதென அம்மகாநாட்டில்கூடிய புத்தகல்விமான்கள் முடிவுசெய்தார்கள்.

நிற்க, மத்தியமாகாண முஸ்லீம் சங்க கூட்டம்ஒன்றிலே பாகிஸ்தானில் முன்னாள் இலங்கை ஹைகம்மிஷனராயிருந்த ஜனப் ரி.பி. ஜயா அவர்கள் பேசியபோது: "நமது பாடசாலைகளைப் பாதுகாக்கும் பொருட்டுச் சத்தியாக்கிரகம்நடத்தத்தானும் நாம் தயாராயிருக்கவேண்டும்; நமதுபிள்ளைகள் இஸ்லாமின் நிழலிலே வளரவேண்டுமென்றும், எதுநன்மையோ அதைச்செய்யவும், எதுதீமையும், அநீதியுமோ அதைச் செய்யாதிருக்கவும் வேண்டுமென்றுமே நாம்ஆசிக்கிறோம்" எனக் கூறியிருக்கின்றார். ஆனல், இலங்கைச்சர்வகலாசாலையிலே புத்தநாகரீகத்தின் விரிவுரையாளரான டக்றர் டபிள்யு. எஸ். கருணரத்ன யாதுசொல்லுகின்றார்? புத்தகம்மிஷனின் அறிக்கையை நிறைவேற்றிவைப்பதாக1956-ம் ஆண்டின் பொதுத்தேர்தலுக்கு முன் தான்அளித்த வாக்குறுதியை அரசாங்கம் மறப்பது இன்று தெளிவாகிறது; புத்தகம்மிஷனின் சிபாரிசுகளிலே உதவிபெறும்பாடசாலைகளை அரசாங்கம்எடுப்பது மகாமுக்கியமானது; ஆனல், அரசாங்கம் ஒருபோதுமே இதைச் செய்யமாட்டாதென்பது இப்போது நன்கு புலப்படுகிறது; அதனல் அரசாங்கத்தில் இனிமேலும் தங்கியிராது கருமம் வெற்றியடையும்வரை நாம் போராடவேண்டுமெனக் கூறியிருக்கின்றார். இப்போது அரசாங்கம் நடத்திவரும் பாடசாலைகளின் நிலைமையை — லட்சக்கணக்கான புத்தபிள்ளைகள் பாடசாலைகள் இல்லாது, பாடசாலைகளில் இடமில்லாது, அதனல் பாடசாலைமுகம் தெரியாது இருந்துவரும் நிலைமையை — மற்றும் கல்விசம்பந்தமான சேவைநிலைமையை நிவிர்த்திசெய்ய — நிவிர்த்திசெய்விக்க அறியாத டக்றர் கருணரத்னபோன்றவர்கள் பெரும்பான்மைமக்களான சிங்களவர்கள் — பெரும்பான்மை மக்களான புத்தர்களென்றெல்லாம் சொல்லி மொழிவிஷயத்தில்போன்று கல்விவிஷயத்திலும் நாட்டில் கலவரத்தையும், அதிருப்தியையும் உண்டுபண்ண முனைவது வருந்தத்தக்கதே என்க.

---

● சுகாதாரவாரம், குழந்தைகள் வாரம் என்பனவாக இன்று உலகின் பலநாடுகளிலும் எத்தனையோவாரங்கள் அனுட்டிக்கப்படுகிறது. ஆனல்,சென்றமாதம்25-ந்திகதிமுதல் பாரிஸ்நகரிலே அமைதிவாரமென ஓர்நவீனவாரம் அனுட்டிக்கப்பட்டு வரலாயிற்று. இது தெருச்சத்தத்தைக் குறைப்பதற்கான ஓர் இயக்கமாகும்.

# சுதேச வர்த்தமானம்

## தாதிமார் பயிற்சிக்கலாசாலை

யாழ்ப்பாண நேர்ஸ்மார்— அதாவது தாதிமார்பயிற்சிக்கலாசாலையிலே ஆரம்பத்தில்ஏறக்குறைய 40 தாதிமாருக்குத் தமிழ்மொழியிலே பயிற்சி அளிக்கப்படும். இங்கே தமிழ்மொழிமூலம் தாதிமாரைப் பயிற்றுவதற்கென்று இந்திய ஆசிரியைகளை விட்டுத்தரமுடியுமாவென்று சுகாதாரமந்திரி காரியாலயம் இந்திய அரசாங்கத்தைக் கேட்கவிருக்கின்றது. யாழ்ப்பாணத் தாதிமார் பயிற்சிக் கலாசாலை 100 தாதிமார் பயிற்சிபெறக் கூடிய இடவசதியுள்ளதாய்க் கட்டப்பட்டுள்ளது. இதிலே பயிற்சிபெறும்தாதிமார் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலுமுள்ள ஆஸ்பத்திரிகளில் வேலைகொள்ளப் படுவார்கள். வருகிற ஆடிமாதத்திலே பயிற்சிஆரம்பமாக விருக்கிறது. யாழ்ப்பாணத்தில் அளிக்கப்படும்பயிற்சி வெற்றியளிக்குமானல், மட்டக்களப்பிலும் தாதிமாரைத் தமிழிலேபயிற்றுதற்கான ஏற்பாடுகளைச் சுகாதாரமந்திரி காரியாலயம் செய்துவைக்கும் இதற்கென அங்கும் தாதிமார்பயிற்சிக் கலாசாலை அமைக்கப்படவேண்டிவரும். தமிழிலே பயிற்றப்பட்ட தாதிமார்தொகை போதியதாயிருந்தால் தமிழர்களைப் பெருந் தொகையினராகக் கொண்ட தோட்ட ஆஸ்பத்திரிகளிலும் அவர்கள் பணியாற்றக் கூடியவர்களாய் இருப்பார்களென்று சுகாதாரபகுதி அதிகாரியொருவர் தெரிவித்திருக்கின்றார்.

## முதல்நன்மையும் உறுதிப்பூசுதலும்

நம் மேற்றிராணியாண்டவர் அவர்கள் சென்ற 28-ந்திகதி வியாழக்கிழமை குருமார்குழுவுடன் பரிசுத்தகொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலுக்கு எழுந்தருளித்திவ்வியபூசைநிறைவேற்றி அதிலே 110 பெண்பிள்ளைகளும், 114 ஆண்பிள்ளைகளுமாக 224பேருக்கு முதல்நன்மையும், பூசைமுடிவில் உறுதிப்பூசுதலும் அருளலாயினர். பூசையின்போது ஆண்டவர்அவர்கள் செய்த பிரசங்கத்திலே, முதல் நன்மைபெறவிருந்த பிள்ளைகளைவிழித்து, அவர்கள் திவ்வியயேசுவைத் தங்கள்இருதயங்களில் எழுந்தருளச்செய்தபின் இன்றையஉலகில் அவசியம்வேண்டியிருக்கும் பிறர்சிநேகம்என்னும் புண்ணியத்தை அவரிடம்இரந்துகேட்டுப் பிறருக்கு உதவிசெய்து, அவர்களின் குறைகுற்றங்களைப் பொறுத்து, எல்லாரோடும் சமாதானமாக வாழ்ந்துவரவேண்டுமென்றும், தூயஆவியானவரையும், அவருடைய கொடைகளையும் அருளுவதாகிய உறுதிப்பூசுதல் பெறவிருந்த பிள்ளைகளைவிழித்து, அவர்கள் தூய ஆவியானவரைப் பெற்றுக்கொண்டபின் அவரிடம் கீழ்ப்படிதல் என்னும் புண்ணியத்தை இரந்துகேட்டுத் தாழ்மையாய்நடந்து பெற்றோருக்கும், ஆசிரியர்களுக்கும், பெரியோருக்கும் கீழ்ப்படிந்தொழுக வேண்டுமென்றும், கோவிலுக்கு வரும்போதெல்லாம் திவ்விய யேசுவிடம் பிறர்சிநேகவரத்தையும், தூயஆவியானவரை நினைந்து கீழ்ப்படிதல்வரத்தையும் மன்றாடிக்கேட்டுவர வேண்டுமென்றும் பொன்மொழிபோலும் நன்மதிகூறினார். பூசையிலே முதல்நன்மை பெறவிருந்தவர்கள் ஆண்டவர்அவர்களின் கரங்களால் திவ்விய நன்மையும், உறுதிப்பூசுதல் பெறவிருந்தவர்கள் பூசைமுடிவிலேஉறுதிப்பூசுதலும் பெற்றுக்கொண்டார்கள். இத்திரு வைபவங்களின்போது பிள்ளைகளின் பெற்றோரும், இனசனரும், அன்பர்களும், ஆசிரியர்கள், ஆசிரியைகளுமாகப் பெருந்திரளானோர் தேங்கியிருந்து திருவழிபாடுகளில் கலந்துகொண்டார்கள். அன்றுதினம் சின்னச்சம்மனசுகளின் பெருநாளாகக் கோவிலும், சூழவுள்ளமைதானமும் காட்சியளித்தன.

## மானநஷ்ட வழக்கு

முன்னாள் உணவுமந்திரி பிலிப் குணவர்த்தனமீது மானநஷ்ட வழக்கு ஒன்று தொடரப்பட்டிருப்பதை முன்னிட்டு, அவ்வழக்கிலே அவரின் சார்பாக விவாதிக்கவும், குற்றச்சாட்டுகளிலிருந்து அவருக்கு விடுதலை பெற்றுக்கொடுக்கவுமாகப் பொறலஸ்கமுவையிலே சிலர் பாதுகாப்பு நிதிஒன்று திரட்டுவதாகத் தெரியவருகிறது.

## தமிழும் நீதிஸ்தலங்களும்

"வடக்கு – கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிஸ்தலங்களில் தற்சமையம் இருந்துவருவதுபோலத் தமிழ்மொழியே நிர்வாகமொழியாகத் தொடர்ந்து இருந்துவரும்; இதில் எவ்விதமாற்றமும் செய்யப்படமாட்டா" தென்று உதவி நீதிமந்திரி தெரிவித்திருக்கின்றார். மேலும், "நாட்டின் எந்தெந்தப் பகுதியிலுமுள்ள தமிழ்ப்பேசும மக்களுக்கும் அந்தந்தப்பகுதியிலுள்ள நீதிஸ்தலங்களிலே தமிழ்மொழியில்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்; தனிச்சிங்களப் பிரதேசத்தில் மட்டுந்தான் தனிச்சிங்களத்திலே நீதிஸ்தலத்தில் நிர்வாகம்நடைபெறும்; தமிழ்ப்பிரதேசத்திலுள்ள சிங்களவர்கள் விரும்பும்போது அவர்களுக்குச் சிங்களத்திலே நிர்வாகம்நடத்தப்படும்; தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களையெல்லாம் சிங்களமயமாக்கப் போவதாய்க் கூறப்படுவதில் அர்த்தமில்லை"என்றும அவர்தெரிவித்திருக்கின்றார்.

---

## நெற்காணிச்சட்டத்தின் போக்கு

"இந்த அரசாங்கம் உலகிலுள்ள ஏனைய அரசாங்கங்களைப்போலவே ஸ்திரமாக இருந்துவருகிறது. ஆகவே, இதனை எந்தச்சக்தியாலும் வீழ்த்த முடியாது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி திரு. பிலிப் குணவர்த்தனவின் உதவியுடன்தான் ஆட்சிக்குவந்தது என்று கூறுவது தப்பாகும். சென்றதேர்தலில் திரு. பிலிப்பினகட்சி ஐந்துஸ்தானங்களைமட்டுமே பெற்றது. ஆனல், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஐம்பதுஸ்தானங்களைப்பெற்றது. ஆகவே, எம்மைப் பிலிப்தான் ஆட்சிக்கு அனுப்பினரென்று எவ்வாறுசொல்லமுடியும்? நெற்காணிமசோதாவிற்கு எம்மில்சிலர் முட்டுக்கட்டையாய் இருந்தோமென்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. திரு. பிலிப் குணவர்த்தன உருவாக்கிய நெற்காணிச்சட்டம் குத்தகைக்குக் காணிபெற்று விவசாயம்செய்பவருக்குப் பெருந் தீங்கிழைப்பதாக இருந்தது. குத்தகைக்குக் காணிபெற்றவருக்குப் பாதுகாப்பளிக்கவே ஒருநெற்காணிச்சட்டம் வேண்டும். ஆனல், திரு பிலிப் குணவர்த்தனவின்சட்டம் ருஷ்யாவிலுள்ளனபோன்ற கூட்டுப்பண்ணைகளை ஆரம்பிக்க வல்லது. அதனல், குத்தகைகாரர் பாதுகாப்புப்பெறர். இதனையே நாம்தடைசெய்து திருத்தம் கொணர்ந்தோம்."

திரு. ஜே. சி. டபிள்யு. முனசிங்கா,
தற்காலிக கைத்தொழில் மந்திரியும்,
சிலாப எம். பி.யும்.

---

● சமீபத்திலே பரிஸ்நகரில் முதலாவதுபுஷ்பக்காட்சி நடைபெறலாயிற்று. சுமார்20லட்சம் தரிசகர்களை அது ஈர்த்துக்கொள்ளலாயிற்று. அதிலிருந்து புஷ்பங்களை உற்பத்திசெய்வாரின் கோவில்ஒன்றைக் கட்டுவதற்கான ஓர் எழுச்சிபிறந்து, பரிஸ்நகரிலிருந்து சுமார்பத்துமைல் தூரத்திலுள்ள மசேஎனுமிடத்திலுள்ள பரிசோதனைப் பூந்தோட்டத்துக்குச்சமீபமாக ஓர் கோவிலைக்கட்டியெழுப்பத் தீர்மானமாயிருக்கிறது.

## சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காசார திருச்சங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

### அப்போஸ்தலிக்க நடபடிக்கை

ரோமாபுரியிலே வேறுவேருன மூன்று கம்மிஷன்கள் இந்த நடவடிக்கைகளைக் கருத்தாகஆராய்ந்து பரிசீலனைசெய்து ஒழுங்குமுறையாயும், செம்மையாயும் இருந்தால், அப்போஸ்தலிக்க நடவடிக்கை எடுக்கும்படியாகப் பரிசுத்தபிதா கட்டளையிடலாம். ஆனல், இந்தநடவடிக்கையானது மேற்றிராசன நடவடிக்கையை விடத் தற்போதுள்ள மூவருக்கும் பதிலாக ஏககாலத்தில் அமர்ந்து பரிசீலனைசெய்யும் ஐந்து நீதிபதிகளுடன் கூடியதாய் அதிகம் சிரமத்தோடு வேலை செய்துவரும். மேற்றிராசன நடவடிக்கை போதியமட்டும் பூரணமாயும், தெளிவாயுமிருந்தால் பரிசுத்த பிதா அப்போஸ்தலிக்க நடவடிக்கையை நீக்கிவிடலாம். அப்போது புதுமைகள் சம்பந்தப்பட்ட நடபடிகளின் விசாரணை ஆரம்பமாகும்.

### முத்திப்பேறுபெற்ற பட்டம்

குறைந்தபட்சம் இரண்டு புதுமைகள் சந்தேகத்துக்கே இடமில்லாதனவென்று அத்தாட்சிப்படுத்தப் படுமிடத்து, சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரிக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் சூட்டும் திருவைபவம் நடந்தேறும். அன்றுமுதல் அவள் முத்திப்பேறுபெற்ற அல்போன்ஸா என்று அழைக்கப்படுவாள். அதன்மேல் அவள் உள்நாட்டிலே வணக்கவழிபாட்டுக்கு அனுமதிக்கப்படுவாள். முத்திப்பேறுபெற்றபட்டம்சூட்டப்பெற்றபின் குறைந்தபட்சம் இருபுதுமைகள் நிகழ்ந்து, ரோமாபுரிக்குத் திருப்தியளிக்கும்வகையிலே அத்தாட்சிப்படுத்தப்பட்டால் அல்போன்ஸா கன்னியாஸ்திரி அர்ச்சியசிஷ்ட பட்டம் சூட்டப்பெற்று, அர்ச்சியசிஷ்டர்களின்பெயரேட்டில் சேர்க்கப்பட்டு, முழுத் திருச்சபையாலும் மகிமைப்படுத்தப்படுவாள். இவைகள் நடந்தேற எவ்வளவு காலம் எடுக்குமோ என்பதைத் தேவன் மாத்திரமே அறிவார்.

### வேண்டுதல் கடிதங்கள்

மேற்றிராசன விசாரணையின் நடபடிகளை அனுப்பிவைக்கும்போது, அவற்றோடுமுத்திப்பேறுபெற்றபட்ட விசாரணையைத் துரிதமாக ஆரம்பித்து வைக்குமாறு பரிசுத்தபிதாவை வேண்டிலத்தீன் பாஷையிலே "வேண்டுதல் கடிதங்கள்" என்று அழைக்கப்படும் மனுப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பதாகிய ஓர் பக்தியுள்ள வழக்கம் இருந்துவருகிறது. இத்தக்கடிதங்கள் பரிசுத்தபாப்பரசருக்கு மேல்வாசகம் இடப்பட்டிருக்கவேண்டும். ஐரோப்பிய மொழிகளில் எதிலாவது இவைகள் எழுதப்படலாம். ஆனல், லத்தீன், இத்தாலிய, பிரான்சிய பாஷைகளுள் ஒன்றில் எழுதுவது விரும்பத்தக்கது. இன்று சங். அல்போன்ஸா ஏறக்குறைய உலகின் எல்லாப் பகுதிகளிலும் பிரஸ்தாபமாக அறியப்பட்டிருக்கின்றாள். உலகின் பல்வேறு பகுதிகளிலும் அல்போன்ஸாவின் வரலாறுபற்றிய புத்தகங்கள் அவளின் பக்தர்களாலே பல்வேறுபாஷைகளிலும் வெளிவந்துள்ளன. இவ்விதம் அவளின் பக்தி சுயேச்சையாகப் பரந்துகொண்டு வருவதும், 1946-ம் ஆண்டுமுதல் — அதாவது ஏறக்குறைய அவள் மரணமடைந்த நாள்முதல் அவளுடைய கல்லறையைத் தரிசிக்கும்யாத்திரிகர்களின் தொகை அதிகரித்துக்கொண்டு வருவதும் அவள் பக்தர்களுக்கெல்லாம் ஆனந்தமான செய்திகளாகும்.


## SAREE PAINTING


and all sorts of fabric painting such as blouses, pillow cases, bed-spreads, church linen, curtains, and even glass painting; canvas, panels (wooden etc.) pottery, and so on taught.

*Please apply for admission to classes, to:*

**Kumar Sundaralingam,**
Retired Inspector of Art,
26/3, Railway View,
CHUNDIKULI.


● அடுத்தசிலமாதங்களுக்கிடையிலே இத்தாலிய ஜனதிபதிகுரொஞ்ஜி, கிறீஸ்நாட்டின் போலஅரசர், பிராஞ்சிய ஜனதிபதி தெகோல், பரக்குவேநாட்டின் ஜனதிபதிஸ்ரொயெஸ்னர்முதலாம் இராச்சியதலைவர்களுக்கும், மற்றும்உயர்தரஅதிகாரிகளுக்கும பரிசுத்தபாப்பரசர் பேட்டியளிக்கவிருப்பதாய் வத்திக்கானிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது.

● அமெரிக்காஅரசாங்கத்தின் வெளிநாட்டுமந்திரியாக விளங்கியிருந்து சுகத்தாழ்வுகாரணமாகச் சமீபத்தில் தமதுபதவியை இராசினாமாச் செய்திருந்தவரான திரு. ஜோண் பொஸ்றர் டல்லஸ்அவர்கள் சென்ற 24-ந்திகதிஞாயிற்றுக்கிழமை காலஞ்சென்றமையானது உலகில் நிகழ்ந்த ஓர்பெரும்துயரசம்பவமாகும். இவருடைய மரணத்தால் அகிலமுழுவதுமே அனுதாபப்படலயிற்று.



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

பரிசுத்த சதாசகாயத் தாயே!

நான் உம்மிடம் தயவாக இரந்து கேட்டுக்கொண்டபடி பெரும் ஆபத்தான சத்திர சிகிச்சையிலிருந்து என்னை அற்புதமாகக் காப்பாற்றினீர். எனது பணிவான நன்றியை உமக்குத் தெரிவிக்கிறேன் பிரசுரிக்கப் பிந்தியமைக்கு மன்னிப்புக் கோருகிறேன்.

ஓர் அடியாள்.

* * *

கடந்த தை — பங்குனி மாதங்களில் நடந்த கலவரங்களில் என்னையும், என் எஜமானர்களையும் அற்புதவகையாய்க் காப்பாற்றிய யேசு அரசருக்கும், பரம நாயகிக்கும் சதாகாலத்திற்கும் நன்றி. மேலும் என்னையும் எனது முயற்சியையும் ஆசிர்வதிப்பார்களாக. பிரசுர தாமதத்திற்காக வருந்துகிறேன்.

பம்பலப்பிட்டி, மே. பி. அ.

* * *

நமது புதிய பாப்பரசரால் சமீபத்தில் அர்ச்சியசிஷ்ட பட்டம் அருளப்பெற்ற அர்ச். சார்ள்ஸ் செஸ்சி என்பவரிடம் யான் இரந்து கேட்டபடி சத்திரசிகிச்சை செய்யாமலே எனக்குண்டான வருத்தம் குணமானது. நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். அவரின் புகழ் பரவுவதாக.

யாழ்ப்பாணம். R. R.


விற்பனைக்கு

முத்திப்பேறுபெற்ற
மாட்டின் தே போரஸ்
சரித்திரச் சுருக்கமும்
நவநாள் மன்ருட்டும் அடங்கியது.
மூத்தர் மாட்டினில்
பத்திகொள்ளும் உத்தமர்க்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
— விலை பிரதி சதம் 10 —
வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு.
தேவையானோர்:
அதிபர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதவும்.


## கன்னியைநாடி வந்தவர்...

தூயகன்னிமரியாளை முஸ்லீம்கள் நன்குஅறிவார்களென்பது உங்களுக்குத்தெரியுமா? அவர்களுடைய புனிதநூலாகிய குருனில பதினறுதடவைகள் அன்னைமரியாளின்நாமம் காணப்படுகிறது. மேலும்இந்நூலின் 19-வது அத்தியாயத்தின் 110பாக்களில் 40 பாக்கள்யேசுவையும், மரியாளையும் பற்றிக் குறிப்பிடுகின்றன.

அநேகநாடுகளிலே எங்குதேவமாதாவுக்கு மகிமைவணக்கம் செலுத்தப்படுகிறதோ அந்த இடங்களுக்கு முஸ்லீம்களும்கூட யாத்திரையாகப் போகின்றனர். லூர்து நூற்றாண்டு விழா வருடத்திலும் அல்ஜீரியாவில் சமாதானம்நிலவும்படியாய் யாத்திரையாக மரியன்னையின் யாத்திரைஸ்தலத்திற்குச்சென்று வேண்டிக்கொண்ட கத்தோலிக்கருடன் வடஆபிரிக்காவிலிருந்து முஸ்லீம்களும் கலந்துகொண்டதோடல்லாமல், லூர்துகெபியிலே ஆராதிக்கிதங்கள் பாடப்பட்டபோது நடைபெற்ற திருப்பலிபூசையிலும் பங்கெடுத்துக்கொண்டனர்.

ஆனல், இவர்கள் பாத்திமாமாதா காட்சிதந்த இடத்திற்குத்தான் யாத்திரைசெல்வதில் அதிகமானவிருப்பம் கொண்டுள்ளனர். ஏனெனில், தீர்க்கதரிசியின்குமாரிஎன்ற அர்த்தமுள்ள—தாங்கள்ஏற்கனவே அறிந்த பெயருடைய போர்த்துக்கேய கிராமமொன்றில்தான் புனிதகன்னிகை காட்சிதந்தாள். அதுதான் பாத்திமா. இவ்விடத்தில்தோன்றிய காட்சிகள் வருங்காலத்தில் முஸ்லீம், கிறீஸ்துவஉலகினர் இணைவதற்கு ஓர் அடையாளம் என்றஉண்மையை இவர்களில்பலரும் காண்கின்றனர்.

வேறொருபுறம், ஒருசில கிறீஸ்துவ சிந்தனையாளர்கள் மெய்யானவேதத்துக்கு வெகுஅருகாமையில் அந்தமதம் அணுகிவருவதாலும், கடவுளின்ஏகத்துவத்தையும், யேசுக்கிறீஸ்துநாதரின் தெய்வீக அலுவலையும் ஒப்புக்கொள்வதாலும் இஸ்லாத்தைக் கிறீஸ்துவசமயத்தின் ஓர்பிரிவேயென்று கருதுகிறார்கள்.

இருந்தபோதிலும், இத்தகைய இனியஐக்கியமானது எத்துணை தூரத்திலிருக்கிறதென்பது இறைவனறிந்தஇரகசியந்தான். ஏனெனில், என்னதான் ஒருசிலவிஷயங்களில் இருசமயங்களிலும் பொதுவான அம்சங்கள்இருந்தபோதிலும் இஸ்லாத்திற்கும், கத்தோலிக்கத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் ஆழ்ந்தவையாயிருப்பதால், இதைப்பற்றி மிகவும் தெளிவாயிருக்க வேண்டியுள்ளது. உதாரணமாக, அவர்கள் தேவதிரித்துவத்தையோ, கிறீஸ்துவின் தெய்வீகத்தையோ, மனுஷாவதாரத்தையோ, மனிதஇரட்சணியத்தையோ ஏற்றுக்கொள்வதில்லை.

ஆயினும், இந்தப்பேதங்களின் காரணமாக, மரியன்னையின் கலாசாரத்தின்வாயிலாக இவர்களுடைய மனந்திரும்புதலுக்காக... என்னும் மேய்ப்பருடையோர் கருத்துக்கிணங்கி இவர்களுக்காக நாம்வேண்டிக்கொள்வதினின்றும் பிறழாதிருப்போமாக.

—முன்னேடி


## TUITION
IN
SHORTHAND-TYPEWRITING

Students (either sex) prepared for Pitmans London, London Chamb. of Comm. and other Examinations.

Students already trained are in Govt. Service, Firms, Schools and other Institutions.

*SHORTHAND SPEED TRAINING A SPECIALITY*

**JOSEPH ANDREW**
"Mazenod House"
4th Cross St., Jaffna.


## என் அன்னை எங்கே?

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தது. கப்பற்போக்குவரத்து, கடிதத்தொடர்பு போன்றயாவும் துண்டிக்கப் பட்டுவிட்டன. மூன்றுவருடங்கள் ஆனந்தனின் வாழ்வு போர்முனையில் கழிந்தது. அன்னையின்பாசம் அவனைக் கவலைக்குள் ஆழ்த்தியது. பணம்அனுப்பவோ, கடிதம்போடவோ அல்லது அன்னையிடமிருந்து அஞ்சல் எதிர்பார்க்கவோ முடியாதநிலையில் தவித்துக்கொண்டிருந்தான். ஆனந்தன் பட்டாளத்திற்சேர்ந்து மூன்றுவருடங்களின்பின் யுத்தம் சமாதானமடைந்தது. படைகளும் கலைக்கப்பட்டன. ஆனந்தனின் போர்த்திறனையும், வீரத்தையும் கண்டஅதிகாரிகள் அவனுக்கு வெகுதொகை சன்மானம்அளித்து அனுப்பினர். தன்னைப் பெற்றுவளர்த்து, ஆளாக்கித் துன்மார்க்கனுய்த் திரிந்தகாலத்தும் அன்புடன் உணவளித்து, பசிப்பிணி பாராது ஆசிகூறிக் கலங்கிய கண்களுடன் விடைகொடுத்த அன்னையைக்காண ஆவலுடன் வந்தான் ஆனந்தன். பசிப்பிணியால்வாடி என்நிலையில் இருக்கின்றாளோ? என் வரவை எதிர்பார்த்து எவ்விதம் அங்கலாய்ப்பாளோ? ஏழ்மைநிலையில் இருக்கும் அவளுக்கு யார்ஆதரவளிக்கின்றனரோ என்ற சிந்தனைப் புரவிமீதேறித் தன்னைப்பெற்ற கோவிலைத்தேடி வந்தான்.

வீடு இருந்தஇடத்தில் மச்சுமாடிவீடொன்று காணப்பட்டது. ஏக்கம் சூழ்ந்து சித்திரவதைசெய்ய அயலவரிடம்சென்று: "என் அன்னைஎங்கே?" என்று வினவினன். அதற்கு அவர்கள்கூறியதுதான்என்ன? "உன்னைப் பெற்றுவளர்த்த அன்னை, அவ்வுத்தமி பசியால்வாடி, நோயால்நைந்து, உன்னையும் உயிருடன் இழந்த துயரத்தால் நொந்து என்றோ அமரத்துவம் அடைந்துவிட்டாள்" என்றனர். இதைக்கேட்ட ஆனந்தன் தன்னைப்பெற்று ஆளாக்கிய கோவிலை—ஔவை பொன்மொழி கூறும் முன்னறி தெய்வத்தை—தன் அன்னையைக்காண — இல்லை அவள் நிரந்தரமாக உறங்கும் இடத்தைக்காண மயானபூமியைநோக்கி ஓடினன். மயான பூமியிலே — ஆழ்ந்தஅமைதி நிலவும் அப்பூமியிலே நிம்மதியுடன் உறங்கும் தன்அன்னையின் இருப்பிடத்தைக் கண்டான் அந்தமணல் மேட்டிலே. அவன் மனக்கண்முன் அவள் ஆசிகூறி அன்று அனுப்பிய காட்சியைக் கண்டான். எல்லையற்ற சோகக்கடலில் ஆழ்ந்த அவன்,

"உண்ணுமல், உறங்காமல் என்
வாழ்வில் இன்பம் எதிர்பார்த்த
என் அன்னை எங்கே? எங்கே??

என்று கதறுவது மயானத்தில் நிலவும் ஆழ்ந்த அமைதியைக் கொண்டு காற்றுடன்கலந்து அப்பிரதேசம் எங்கும் எதிரொலித்தது.

ஆம், துன்பம் வந்தபின் துயரப்படுதல் ஏற்றதல்ல. ஆகவே, துன்பம் அணுகுமுதல் தடைத்தெறிந்து இன்பங்காண முயல்வதே மக்களின் கடமையாகும்.

(யாவும் கற்பனையே)

# TENDER NOTICE

## JAFFNA MUNICIPAL COUNCIL

**Lease of Gala Including Bus Stand**

Sealed Tenders on prescribed forms obtainable in advance from the Municipal Office, Jaffna will be received by the Municipal Commissioner, Jaffna for the lease of the undermentioned Gala including Bus Stand up to 3.00 p. m. on 16-6-59.

| Name of Gala including Bus Stand | Cost of Tender Form | Tender Deposit payable to obtain tender Form | Fees payable before obtaining Tender forms for notarial Bond |
|---|---|---|---|
| Grand Bazaar Gala including Bus Stand (for the period 16-6-59 to 31-12-59) | Rs. 10-00 | Rs. 250-00 | Rs. 150-00 |

Further particulars will be furnished on application in writing to the undersigned.

A. V. Chinniah,
Municipal Commissioner.

Municipal Office,
Jaffna, 26-5-59.

# கடற்பாசியின் உபயோகம்

கால்நடைகளை வளர்ப்பதற்கும், அதன்மூலம் விவசாயத்தைப் பெருக்குவதற்கும் கடற்பாசிகள் விவசாயிகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கின்றன. உலகமுழுவதும் பரவியுள்ள 32கோடியே 90லட்சம்கனஅடி உப்புத்தண்ணீரில் 17,000 இனங்களைச் சேர்ந்த பாசிகள் உற்பத்தியாகின்றன.

பலநூற்றுண்டுகளாகப் பலநாடுகளைச் சேர்ந்தமக்கள் இக்கடற்பாசிகளை உபயோகித்து வந்துள்ளார்கள். மிருகங்களின் தீனி, உரம், உணவு ஆகியவற்றிற்குக் கடற்பாசிகள் பயன்படுகின்றன.

கி. மு. 3,000 வருடங்களுக்குமுன்னரே சிலவகைக் கடற்பாசிகளை மருந்துகளாக மக்கள் உபயோகித்தார்கள். இன்றுமே சில கீழ்த்திசைநாடுகளில் காய்கறி உணவின் ஒருபகுதியாகக் கடற்பாசிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவைகளில் அதிகமான போஷணை சத்துஇருப்பது கண்டுபிடிக்கப்பட்டமையால் மேற்குநாடுகளில் கடற்பாசிகளைக் கால்நடைகளின் தீனியாகவும், உரமாகவும் உபயோகிக்கிறார்கள் கடற்பாசிகள் சமுத்திரத்தைப் பொறுத்தவரை வெறும்பாசிதான். ஆனால், கரையைப் பொறுத்தவரை அவற்றில் ஏராளமான வைற்றமின்களும், உலோகச்சத்துகளும் அடங்கியிருக்கின்றன.

கடற்பாசிகளில் பதினோயிரம் வகைகள் இருப்பினும் அவைகளை நிறங்களின் அடிப்படையில் பச்சை, நீலப்பச்சை, சிவப்பு, பழுப்புநிறமென்னும் நான்கு இனங்களாகப் பிரிக்கலாம். அவற்றில் சிவப்புநிறத்தையும், பழுப்புநிறத்தையும் சேர்ந்தஇனங்கள் முக்கியமானவைகள். பழுப்புநிற வகையைச் சேர்ந்தகடற்பாசிகள் குளிர்ந்தநீரிலும், செந்நிறப்பாசிகள் வெப்பமும், ஆழமுமான நீரிலும் வளர்கின்றன.

பூமியில் 70·8 சதவிகிதத்தை விழுங்கிக்கொண்டிருக்கும் கடற்தண்ணீர் தரையிலிருந்து கொண்டுவரப்படும் எல்லா உலோகச்சத்துகளையும் தன்பால்சேர்த்து வைத்துக்கொண்டிருக்கிறது. இத்தகைய போஷணைச்சத்துகள் கடல்நீரில் இருப்பதால்தான் கடற்பாசி அதில் உற்பத்தியாக முடிகிறது.

தரையில் உற்பத்தியாகும் செடியைக் காட்டிலும் கடல்பாசியென்னும் செடியில் அதிகமான உலோகச்சத்துகள் அடங்கியுள்ளன. கடற்பாசியை எரித்தபின் கிடைக்கும் சாம்பலிலே தரையில் வளர்ந்த செடியை எரித்து எடுக்கும் சாம்பலில் இருப்பதைக்காட்டிலும் அதிகமான உலோகச்சத்துகள் இருப்பதால், அந்தச்சாம்பல் உரத்துக்குப் பெரிதும் பயன்படுகிறது.

கடற்பாசியில் வைற்றமின்கள் அதிகமாக உள்ளனவெனினும் கொழுப்பு, புரொட்டெயின் சத்துகள் ஏனையகாய்கறிகளில் இருப்பதைப்போலவே இருக்கின்றன. பால், சொக்கிளேற், ஐஸ்கிறீம், பால்புடிங்முதலிய சிற்றுண்டிப் பதார்த்தங்களுக்கும், மற்றும் மருந்துக்கிறீம் முதலியவைகளுக்கும் கடற்பாசிகள் உபயோகிக்கப்படுகின்றன. மற்றும் சிலவகைக் கடற்பாசிகள் மேலே குறிப்பிட்டவாறு கால்நடைகளின்தீனி, உரம்ஆகியவைகளுக்குப் பயன்படுகின்றன.

மேல்நாடுகளிலே கடற்பாசித்தீனி கால்நடைகளுக்கு மட்டுமின்றிக் கோழிக்குஞ்சுகள், வான்கோழிகள், குதிரைகள், செம்மறியாடுகள் முதலியவைகளுக்கும் ஆகாரமாகக் கொடுக்கப்படுகின்றன. இந்தத்தீனியை உதவுவதில் சிக்காகோநகரிலுள்ள ஒருநோர்வேஜியன்கம்பெனி புகழ்பெற்றதாகும். நோர்வேஜியன் கடற்கரையோரமாகக் கடல்நீரில்காணப்படும் பழுப்புநிறக் கடற்பாசிகளை அரசாங்க ஆதரவுடன் அறுவடைசெய்து, அதிலிருந்துதான் இத்தீனியைப் பிரஸ்தாப கம்பெனி தயார்செய்கிறது. இதில் புரொட்டெயின்ஸ் 5·7சதவிகிதமும், கொழுப்புச்சத்து 2·6சதவிகிதமும் இருப்பதாகவும் ஏ, பி 1, பி-2, பி-12, சி ஆகிய வைற்றமின்களும், மேலும் ஏழுவகை வைற்றமின்களும் அடங்கியிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது. மேலும் இந்தத்தீனியில் வெள்ளி, அலுமினியம், தங்கம்முதலிய அறுபது உலோகச்சத்துகளும் இருக்கின்றனவாம்.

பென்சில்வேனியாவிலுள்ள கோழிப்பண்ணைகளில் கோழிகளுக்குக் கடற்பாசித் தீனிகொடுத்தபிறகு, கோழிகள் அதிகமாக முட்டையிடுகின்றன என்பதை ஆராய்ச்சிமூலம் கண்டுபிடித்துள்ளனர். சிக்காகோநகரிலே குதிரை வளர்ப்போரான சுமார் நூறுபேர் இந்தத்தீனியைத்தான் தங்கள்குதிரைகளுக்குக் கொடுக்கின்றனர்.

யேரிலாந்தில் விவசாயிகள் தங்களது தக்காளித்தோட்டங்களுக்குக் கடற்பாசிஉரத்தை உபயோகித்ததில் உற்பத்தி 35சதவிகிதம்முதல், 50சதவிகிதம்வரை உயர்ந்திருப்பதைக் கண்டுபிடித்துள்ளார்கள். ஆகவே, எதிர்காலத்தில் கடற்பாசிகளின் உபயோகம் வெகுவாக அதிகரிக்கலாம்.

> "ஒற்றுமையினால் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

# அங்கும் இங்கும்

### சமயசுதந்திரம்

"சாதித்துறையில் மாத்திரம்அல்ல, சமயத்துறையிலும்கூட இன்று பேதாபேதங்கள் ஏற்பட்டுவிட்டன. புத்தர், கிறீஸ்தவர் என்றஉணர்ச்சி இன்று ஆட்சிப்பீடத்தில் கேட்கத்தொடங்கிவிட்டது. இந்தநிலை உடனடியாகக் களைந்தெறியப்படவேண்டும். ஒவ்வோர் சமயமும் சுதந்திரமாக வாழ விடவேண்டும். சமயசுதந்திரம் தனிமனித சுதந்திரம். அதிலேதலையிட எவருக்குமே உரிமையில்லை. ஒவ்வோர் சமயமும் அதனதன்வழியிலே செயல்படுத்தப்படவேண்டும். அதற்கேற்றவழியிலே ஆட்சியாளர் வழிசெய்ய வேண்டும்."

திரு. வி. ஏ. கந்தையா,
ஊர்காவற்றுறை—எம். பி.

### தடுத்துவைக்க முடியும்

"இந்தநாட்டிலே கம்யூனிஸம் தலைகாட்டத்தொடங்கிவிட்டது. நாட்டின் வறுமைநிலையைப்போக்கிச் சகலரும் வாழ்வதற்கான வசதிசெய்யப் படுவதன்மூலமே அதைத் தடுத்துநிறுத்தமுடியும். தெய்வநம்பிக்கைகொண்ட மக்களிடையே கம்யூனிஸம் தலையெடுக்காதென்றே நம்புகின்றேன். தமிழரின் இன்றையநிலையிலே உடனடியாக வேண்டப்படுவது பொருளாதாரவிடுதலையே. இதனைஅடைய ஒவ்வொருவரும் அயராதுழைக்கவேண்டும். செல்வம்படைத்தவர்கள் இன்றுமுன்வந்து பலதொழில்துறைகளிலும் ஈடுபடவேண்டும். பல்வேறு தொழில்நிலையங்களை அவர்கள் தமிழ்ப்பிரதேசங்களில் ஏற்படுத்துவதன்மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும். அதனால் பெருந்தொகையானோருக்கு வேலைவசதிகளை ஏற்படுத்தமுடியும்."

செனற்றர் ஜி. நல்லையா

### "அரசாங்க குதிரைகள்"

"அரசாங்கத்தை ஒருகுதிரைவண்டிக்கு ஒப்பிட்டு, அந்தவண்டி இடையிலேநின்றுவிடாது முன்னேறிச் செல்லவேண்டுமென்று பிரதமர் கூறியிருக்கிறார். சிலகுதிரைகள் இடக்குப் பண்ணுவதை நான்பார்க்கிறேன். இந்தக்குதிரைகள் சரியானமுறையிலே வண்டியை இழுக்கும்படி செய்யப் பிரதமரைத்தூண்டுவேன். முடியாவிடின் பிரதமரின்கையிலிருக்கும் எனதுகடிவாளத்தை அறுத்துக்கொண்டு வெளியேறிப் பின்னுக்கிழுக்கும் குதிரைகளுக்குச் சாட்டையடி கொடுத்து முன்னுக்கிழுக்கச்செய்யும் நடவடிக்கையை மக்களேஎடுக்கும்படி கேட்டுக்கொள்வேன்."

திரு. டி. பி. இலங்கரத்ன,
தொழில்—சமூகசேவாமந்திரி

### குணவர்த்தனவும் கூட்டுறவுவங்கியும்

"திரு. பிலிப் குணவர்த்தன கூட்டுறவு அபிவிருத்திவங்கியை நிர்வகிப்பதற்கு ஆறுதலைவர்களை நியமிக்க உத்தேசித்திருந்தார். இந்த ஆறுதலைவர்களிலும் மூவர் அவராலே நியமிக்கப்படவேண்டுமென்றும், மற்றமூன்றுபேரையும் கூட்டுறவுச்சங்கங்களால் நியமிக்கப்படும் ஐவரிலிருந்து அவர்தானே தெரிவுசெய்யவேண்டுமென்றும் மசோதாவில் கூறப்பட்டிருந்தது. இதிலிருந்து, எல்லாத்தலைவர்களும் திரு.குணவர்த்தனவின் கையாட்களாகவே இருப்பார்கள்என்பதை நீங்கள் எளிதிலே கண்டுகொள்வீர்கள். இந்தமுறையிலே கூட்டுறவு அபிவிருத்திவங்கி அமைக்கப்பட்டால் அவர் தனதுஅரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள அது உதவியாயிருக்கும். இதை நாங்கள் விரும்பவில்லை. கூட்டுறவு அபிவிருத்திவங்கி அவரின் சொந்தஅபிலாசைகளை நிறைவேற்றிவைக்க உதவும் ஓர்சாதனமாய் இராது கிராமவாசிகளின்தேவைகளைப் பூர்த்திசெய்வதாகவே இருக்கவேண்டுமென்று நாங்கள் கருதினோம். எங்களின் இந்தக்கருத்தைச் செயலில்காட்டிவைக்க நாங்கள் கொஞ்சமும் தயங்கமாட்டோம்."

திரு. ஜே. சி. டபிள்யு. முனசிங்கா,
தற்காலிக கைத்தொழில் மந்திரியும்,
சிலாப எம். பி. யும்.

### தோட்டத்துரையின் பாராட்டுரை

"எனது 35வருடகாலத் தேயிலைத்தோட்ட அனுபவத்திலே இந்திய தொழிலாளர்களைப்போன்று வேலைச்சிறப்பும், திறமையுங்கொண்டவர்களைக் கண்டதேயில்லை. இலங்கையிலே சமீபகாலமாக ஏற்பட்டுவரும் அரசியல்—பொருளாதார— சமூக மாற்றங்களே ஐரோப்பியர்கள் இலங்கையைவிட்டுச் செல்வதற்குக் காரணமேயல்லாது அதிகரித்துவரும வ்விதவரிகளும் காரணமாகா."

திரு. டபிள்யு. ஜே. ஜில்றர்,
ஸ்ரோன், பலாங்கொடைக்குறாப்பின்
பெரிய தோட்டத்துரை.

### கடுமையாக உழைக்கவேண்டும்

"அறிவு, ஆற்றல்முதலான சகல துறைகளிலும் அரசாங்கத்தையோ அன்றேல் பிறரையோ எதிர்பாராது தமது சுயமுயற்சியினால் முன்னேற்றம் காணத் தமிழ்ப்பேசும்மக்கள் முன்னிலும்கடுமையாக உழைக்கவேண்டும். விவாக, மரணச் சடங்குகளின்போதும், ஆலய உற்சவங்களின்போதும் பிறர் மதிக்கும்படியாகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுகின்றார்கள். அநாவசியமாகச் செலவுசெய்யும் இந்தப் பணத்தைக்கொண்டு தொழிற்சாலைகளோ அன்றேல் கல்விநிலையங்களோ உருவாக்கினால் நாட்டின் பொருள் வளத்திற்கும், தொழில்வளத்திற்கும் எத்துணைபெரும் உதவியாகும். இதைச்சிந்தித்துச் செயலாற்ற வாலிபர்கள்முன்வந்து உழைக்கவேண்டும்."

திரு. கே. எஸ். அருள்நந்தி,
முன்னாள் வித்தியாதிபதி.

### கம்யூனிஸ்தர்களின் நடவடிக்கைகள்

"திபேத்திலும், ஹங்கேரியிலும் உருவாக்கிய நிலைமையைப்போலவே இலங்கையிலும் கம்யூனிஸ்தர்கள் ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலும்புகுந்து இங்கும நெருக்கடியானநிலைமையை உருவாக்க முயன்றுவருகிறார்கள். அவர்களை முற்றாகஒழித்துக்கட்டும் பொதுப் பணியிலே பொதுமக்கள் ஒன்றுசேரவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏகாதிபத்தியவாதிகளான கம்யூனிஸ்தர்கள் இலங்கையிலுள்ள ருஷியஸ்தானீகராலய உதவியோடு நாட்டின் ஒவ்வோர்வாழ்க்கைத்துறையிலும் புகுந்துள்ளார்கள். அவர்கள் இருதடவைகளிலே நாட்டில் குழப்பகரமான ஓர் சூழ்நிலையைஉருவாக்க முயன்றிருக்கிறார்கள். முதலாவதாக, அவர்கள் வகுப்புக்குழப்பத்தைஎழுப்ப முயற்சித்தார்கள். இரண்டாவதாக, அரசாங்கத்திலிருந்து சோஷலிஸ்தவாதிகளைத் துரத்திவிட்டுக் கம்யூனிஸ்த அரசாங்கம் ஒன்றை உருவாக்க முயற்சித்தார்கள். அதிர்ஷ்டவசமாக இருதடவைகளிலும் அவர்களின் முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன. இலங்கையிலே கம்யூனிஸ்தர்கள் ஓர்இரகசியஇயக்கம் ஒன்றை நடத்துகிறார்கள். அதன்மூலமே சகல வாழ்க்கைத்துறைகளிலும் அவர்களால் நுழைந்துகொள்ள முடிந்தது. அரசாங்கசேவையிலும், பாராளுமன்றக்குழுவிலும் கம்யூனிஸ்தர்கள் உள்ளனர். தாங்கள் முன்னேற்றவாதிகளென்று இந்தக்கம்யூனிஸ்தர்கள் கூறிக்கொள்ளுகின்றனர். மனிதவர்க்கத்தையே அழித்தொழிப்பதுதான் அவர்களது செயலாக இருக்கிறது. இதுதானு அவர்களின் முன்னேற்றமான நடவடிக்கைகள்?"

திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை,
சமசமாஜ மகாஜன பெரமுனையின் தலைவர்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை.

### பஸ்நிலையத்தை உள்ளடக்கிய காலையில் வாடகைப்பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரம்—1959

கீழ்வரும் பஸ்நிலையத்தை உள்ளடக்கிய காலையின் வாடகைப்பணம் அறவிடும் உரிமைக் குத்தகைக்கான கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகராசபைக் கொமிஷனரால் 15-6-59-ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். இக் கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபை அலுவலகத்திலிருந்து முன்னதாகப் பெறக்கூடியமாதிரிப் பத்திரத்தில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருக்கவேண்டும்.

| சந்தைகள் முதலியவற்றின் பெயர்கள் | கேள்விப் பத்திரங்களின் விலை | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்காகச் செலுத்தப்படவேண்டிய பொறுப்புப் பணம் | கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்குமுன் நொத்தாரிஸ் உறுதிக்காகச் செலுத்தவேண்டிய கட்டணம் |
|---|---|---|---|
| பஸ்நிலையத்தை உள்ளடக்கிய காலை 16-6-59-ம் திகதி முதல் 31-12-59 ஆம் திகதி வரை | 10-00 | 250-00 | 150-00 |

இதர விபரங்களைக் கீழே கையொப்பம் இட்டிருப்பவருக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்து அறியலாம்.

மாநகராசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
26-5-59.

ஆ. வ. சின்னையா,
மாநகராசபைக் கொமிஷனர்

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1918**

மானிப்பாய்
சிவக்கொழுந்து முத்துக்குமாரசாமி
— வழக்காளி.

எதிராக
தற்போது கிளிநொச்சி 6-ம் வாய்க்கால்
நவாலி, கணபதி கதிரவேலு
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 1918-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு ஆண்டுக் காணிகள் 1959-ம் ஆண்டு யூலாய் (ஆடி) மீ 4-ம் உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 1625/-ம் மேலும் 1000/-ரூபாவுக்கும் 8-11-1957 திகதி தொடக்கம் 15-6-58 திகதி வரைக்கும் வருடமொன்றுக்கு 10% வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறக்கும்வரைக்கும் 5% வட்டியும், கோட்டுச் செலவு 213 ரூபா 40 சதமும்.

### காணிகள் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று நவாலியிலுறை "பணிக்கன் வயலும் கொட்டையடியும்" தெற்பரப்பு 18 (F.C.) இதற்கு எல்லை: கிழக்கு—கார்த்திகேசர் சுப்பையா மனைவி சின்னம்பிள்ளையினுதனம். வடக்கு—குளம். மேற்கு—சோமாஸ்கந்தக் குருக்கள், இராமசாமிக் குருக்களினுதனம். தெற்கு—இதன்கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் பதிவு இல. E. 285/191.

2. மேற்படி நவாலியிலுறை "கொட்டையடியும் பணிக்கன்வயலும்" தெற்பரப்பு 30, குளிகள் 4. இதில் கிழக்குப்பக்கமாக தெற்பரப்பு 9 நீக்கி, மிகுதி தெற்பரப்பு 21, குளிகள் 4, கிணறும். இதற்கு எல்லை: கிழக்கு—மீதப்பகுதி ஆதனம். வடக்கு—மேற்சொல்லப்பட்ட ஆதனம். மேற்கு—செல்லப்பர் அப்புக்குட்டியினுதனம். தெற்கு—வெள்ளையன்சரவணையினுதனம். கிணற்றுக்குப் போக்குவரவு செய்யும் பாதை நிலமும், ஒழுங்கையும் இதடங்கலும். குறித்த கிணற்றில் மறுபங்காளருக்குரிய கிணற்றுப்பங்கும், தூர்வை வழி வாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கல். பதிவு இல. E. 285/176.

வி. சே. குட்டிப்பிள்ளை,
கோமிஷனர்.

643, கார்த்திகேசன் துறை வீதி,
வண்ணார்பண்ணை.
27-5-59

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2314**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

வண்ணார்பண்ணை தென்மேற்கு
நடராசா கனகசபாபதி
— வழக்காளி.

எதிராக
வண்ணார்பண்ணை கிழக்கு
1. ஆறுமுகம் இரத்தினம்
2. சுப்பிரமணியம் கனகசபை
(சிறுப்பர் கந்தோர்)
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2314-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணி 1959-ம் ஆண்டு ஆடி மீ 15-ம் உ (15-7-59) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 5730/-ம் இன்னும் ரூபா 5000/-த்திற்கு 3-7-58 தொடக்கம் 9-9-58 வரையும் 100க்கு 12% வட்டியும், பின்பு கூட்டுத்தொகை இறுபடும்வரைக்கும் 100க்கு 5% வட்டியும், கோட்டுச் செலவு 235 ரூபா 44 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி, மட்டுவில் கோவிற்பற்று மட்டுவில் தெற்கு இலுப்பை வீரற்சேணி ளவு ப. நி. இ. 24. எல்லை: கிழக்கும்—வடக்கும்—ஒழுங்கை. மேற்கு—ரோட்டு. தெற்கு—வீரற்சேணி கந்தசாமி கோவில் உற்சவவீதி. இதில் சொரியலாய் நாலில் மூன்று பங்கும். முற்பதிவு இல. F. 309/222.

தா. செல்லையா,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 37, கொழும்புத்துறைவீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், 1-6-59.

---

வெனிஸ்நகரிலுள்ள அர்ச். மாற்குவின் மகாதேவாலயத்திலே அர்ச். 10-ம்பத்திநாதரின் புனித உடல் பிரசித்தவணக்க வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்த நான்குவாரங்களிலும் பத்துலட்சம் மக்கள் சென்று அதனைச்சந்தித்து வணங்கியிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கிறீஸ்தவர்களின் ஐக்கியத்துக்காக நடைபெற்ற தூயஆவியானவரின் நவநாள்பத்திமுயற்சியிலே அருளப்ப பாப்பரசரும்கலந்து தூயஆவியானவரின் திருநாளாகிய ஞாயிறன்று அர்ச். பேதுருவானவரின் மகாதேவாலயத்தில் பாடப்பெற்ற வேஸ்பரிலும் நேர்முகமாகப் பங்குபற்றலாயினர்,

---


# YARL VINOTHA CARNIVAL 1959

## GRAND CARNIVAL & EXHIBITION

### JUNE 12TH TO 25TH 1959.

At the Jaffna Municipal Town Hall Grounds.

All Departments, Embassies, Tea Propaganda Board Corporations, Leading Firms, Schools taking Part, Bullock Cart Races, Wrestling, Flood Lit Volley Ball and Net Ball Tournaments, Merry-go-round, Children's Park, Refreshments, Well of Death, Car Raffle, Drama and Concerts, Indian Artistes, Bar, Indian Hand-Loom Emporium, Full Scale School Competitions, Singing, Dancing, Elocution, Shooting, Drill, Swimming Etc.

Library needs your time and purse.
Please come always; spend generously.
One Stall 10 × 15—100-00 for the Carnival Season.
Two Stalls 150-00 " " " "

K. V. Mylvaganam,
General Secretary,
Yarl Vinotha Carnival.


---

## வாடகைக்கு

### யாழ்ப்பாண மாநகரசபைக்குரிய ஆட்டிறைச்சிக் கடைகளும், கோழிக் கடைகளும்

பெரியகடை மீன்சந்தைக்கு அருகாமையில் புதிதாகக் கட்டப்படுகின்ற 8 ஆட்டிறைச்சிக் கடைகளும், 2 கோழிக் கடைகளும் 1-8-59ஆம் திகதி முதல் வாடகைக்குக் கொடுக்கப்பட இருக்கின்றன.

இவற்றை மாநகரசபை உபவிதிகளுக்கு இணங்க வாடகைக்குப் பெற விரும்புவோர், கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும்.

ஆ. வ. சின்னையா,
மாநகரசபை கொமிஷனர்.
மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 26-5-59

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1174**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

ஊரெழு
நடராசா மனைவி கண்மணியம்மா
— வழக்காளி.

எதிராக
வண்ணார்பண்ணை மேற்கு
1. சிவலிங்கம் அருளம்மநாயகமும்,
2. பெண் மங்கையற்கரசியும்.
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 1174-ம்இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1959-ம் ஆண்டு ஆடிமாதம் 7-ந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 9,285-உம், இன்னும் ரூபா 8,000 த்திற்கும் 23-8-56 தொடக்கம், 23-5-58வரையும் 100-க்குப் 12%வட்டியும், இன்னும் கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 380 ரூபா 26 சதமும்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கு இறை ஒட்டைப்புளியடி பர. நில. இலக். 1 குளி 5¾யும், செய்பயிர், வான்பயிர்களும், கிணறும், புதுக்கல்வீடும். எல்லை: கிழக்கு—செல்லையா நடராசாவுக்கும், பெண் சிவகங்கைக்கும் உரிய ஆதனம். வடக்கு—அப்துல்காதர் பெண் சுல்தான் முகிதீன் நாச்சியாவின் ஆதனம். மேற்கு—குமாருபெண் முத்தாச்சியின் உரிமைக்காரரின் ஆதனம். தெற்கு—ஒழுங்கை. இது அடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனர்.

35, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 30-5-59

---

## துன்பத்திலே பூக்கும் இன்பம்

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

பிய பறவைபோல — அறிந்தும் அறியாதவன் போல — அவளும் ஆரோ தானும்ஆரோ என்றுற்போல நடந்து கொண்டான். முன்னிலும் பன்மடங்கு தனது ஆனந்தவாழ்க்கையிலே அவன் மூழ்கிவிட்டான்.

வியாதி கொழுந்துவிட்டு எரிந்தது. டக்றரின் சிகிச்சையை ஏற்க மறுத்து விட்டாள் பிலோ. துன்பத்தை — சாவின் பயங்கர முத்தத்தை — தன் தனயனுக்காகச் சகித்து இன்பங் காணவே அவள் துணிந்திருந்தாள். அதற்காகவே அவளுடைய நீலம்பூத்த அதரங்களும் துடித்துக்கொண்டிருந்தன. அவளுக்கு அவஸ்தைப்பூசுதல் கூடக் கொடுக்கப்பட்டுவிட்டது.

டக்றர் வில்லியம் மனம்புழுங்கியவராய்த் தன் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடைபோட்டபடியிருந்தார்.

அப்பொழுது பலத்த காயத்துடன் ஒருவாலிபரைச் சிகிச்சைக்காகத் தூக்கி வந்ததைச் சன்னலினூடாக டக்றர் வில்லியம் கவனித்தார். அவனைக் கொண்டுவந்தகார் வெளியே நின்றது. அவனுக்கு உடனே ஆரம்பசிகிச்சை அளித்தார். அவன் மயக்கம்தெளிந்து தான் யாரென்பதை அறிவித்து, புற்றுநோயால் அவதிப்படும் தன் தாயைப் பார்க்க விரும்புவதாக அவரிடம் தெரிவித்தான். உடனே அவன் கட்டிலைப் பிலோவின் அறைக்கு நகர்த்திப்போய்த் தாயையும், தனயனையும் ஒன்றுசேர்த்தார் டக்றர் வில்லியம்.

அப்போது மகன் அபாயகரமான நிலைமையில்இருந்த தன் தாயைநோக்கினான். அவளின் பரிதாபகரமான கோலத்தைக்கண்டு மனமுருகினான். ஓர்கால் பெருமூச்செறிந்து, இருவிழிகளிலுமிருந்து அருவிபோலக் கண்ணீர்பெருக, "அம்மா, உங்கள் அருமைப் புதல்வனை மன்னியுங்கள்; கார் விபத்தில் நான் சிக்கிப் பலத்த காயம் அடைந்தபின் எனது உண்மைவாழ்வு எனக்குத் தோன்றிப் புத்தி தெளிந்துவிட்டது; இனிமேல் என்றும் நல்லவனாக வாழ்வேன்" என்று அவளது இறுதிமூச்சின்முன் வாக்களித்தான். "என் தனயனுக்குப் புத்தி வந்துவிட்டது; அவன் திருந்தினன்; நான் அனுபவித்த வேதனை வெற்றிகூடியது" என்ற பூரிப்பில் டக்றர் வில்லியத்தின் அன்புக்கும், அனுதாபத்துக்கும் நன்றி கூறியபடி கண்மூடினாள் பிலோ.

டக்றர் வில்லியம் அந்தக் கண்ணாறுவியான காட்சியைக் கண்ணுற்றதே கலங்கிய தனது கண்களைத் துடைத்த படியே அழுதுகொண்டு கவலைதோய்ந்த வதனத்துடன் அப்பாலசென்றார்.

—வே. குரலொலி

## அருமைச் சகோதரங்களே!

எமது பரிசுத்தபிதா சிம்மாசனம் ஏறியபின் அர்ச்சியசிட்டர்கள் இடாப்பில் முதன்முதல் யார்யாரைச் சேர்த்தார் தெரியுமா? செஸ்ஸேயின் அர்ச். சார்ள்ஸ் என்பவரும், அர்ச். யுவக்கினுளும் ஆவர்.

சார்ள்ஸ் பிரான்சிஸ்கன் சபையினர்; உதவிச் சகோதரர். பெற்றோர் ஏழைகளாயினும் அடிப்படைக்கல்வி ஊட்டியிருந்தனர் மகனுக்கு. பின் ஆடுமேய்க்க அனுப்பினர். வாசிக்க அறிந்தவராகையால் சுத்தவாளருடைய வாழ்க்கைவரலாறுகளைப் படித்துப் பின்பற்றிவந்தார்.

சந்நியாசம் புகுமுன்னரே விரத்தத்துவ வாக்குக்கொடுத்திருந்தார்; அவ்வாக்கை மரியன்னைக்கு அர்ப்பணஞ் செய்திருந்தார்.

1636இல் சந்நியாசியாகியபின் கோயிலில், சமையலறையில் மடத்து வாசலில், தோட்டத்தில் மாத்திரமல்ல, ஏவியபடி எவ்விடத்திலும் பணிபுரிந்து வந்தார். இப்படி 33 ஆண்டுகள் கழிந்தன.

இப்பரிசுத்தவான் சில நூல்களும் எழுதினர், உந்தத ஞான ஐக்கியத்தைப் பற்றி.

165ப-இல் நடந்த கொள்ளைகோயில் ஏழைமக்களுக்கு உணவும், உடையும் இரந்துகொடுத்து, மரணிக்கிறவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

மடத்தில் கடுங்கோபமும், மோகச்சோதனைகளும் வந்தபொழுது அவைகளைச் செயிக்கக் கடுந்தவமுயற்சிசெய்தார்; செபத்தில் விழித்திருந்தார்; வறுமையைக் கொடுமையாக அனுசரித்தார். பூசைவேளையில் எழுந்தேற்றஞ் செய்யப்பட்ட சற்பிரசாதத்திலிருந்து அற்புதகதிர் ஒன்று அவருடைய இருதயத்துள் புகுந்து, அதை உருவமாற்றஞ்செய்தது. அது இன்னும் ரோமையில் காப்பாற்றப்படுகிறது.

1669-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ந் திகதி அவர் கடும் வியாதி கண்டார். ஆபத்தான நிலையிலிருக்கும் பொழுது பல பிரமுகர், 9-வது கிளமேந்து பாப்பரசர் கூட அவரைவந்து தரிசித்தனர்.

அர்ச். யுவக்கீனுளைப்பற்றி அடுத்த இதழில் படிக்கவும்.

அண்ணா.

—※—

## கன்னியும் அன்னையும்

தாவீது அரச குடும்பத்திற் பிறந்த சுவக்கின், அன்னம்மாள் என்போர் பரிசுத்தவான்களாயிருந்தும், புத்திரப்பேறில்லாத் துன்பத்தில் வாழ்ந்து வயோதிபமடைந்திருந்தனர். அவர்கள் வெகுகாலமாகச் செய்த தவத்தின் பயனைச் சித்தமிரங்கி வயோதிபத்தில் உலக இரட்சகரின் மாதாவாக நியமிக்கப்பட்ட மரியாய் அவர்களுக்கு மகவாகப் பிறந்தாள்.

கன்னிமரியம்மாள் சிறுப்பந்தொட்டுப் புத்திவிவேக ஞானமுள்ளவளாய் விளங்கினதுமாத்திரமின்றித் தன்னை முழுதுஞ் சருவேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து அவர் சித்தப்படி தன் விருப்பு வெறுப்புக்களைக் கவனியாமல் செபத்திலும், தபத்திலும் காலத்தைக் கழித்துவந்தாள்.

மானிலத்து மாண்டருள் மாசற்றோர் இல்லையென அறிந்த மரியாய், மணவாழ்க்கையை மறுத்து "மாசற்ற கற்பு" என்ற மல்லிரை நறுமணத்துடன் மறுவின்றிக்காப்பாற்ற நித்திய கன்னியாகவே இருக்கக் கருதினாள். ஆனால், அவளை, பசாசின் இச்சக மொழியைநம்பிப் பழத்தையுண்டு பாவத்துக்குள்ளாகிப் பரிசுத்தத்தை விட்டகன்று பாதாளத்திலே விழுந்து பாடுபடவேண்டியிருந்த இந்தப் பாவஜென்மத் தூக்குமுப்பரலோக பாதையைத் திறக்க ஒரு கால்வாயாகத் தெரிந்தெடுத்தார் தேவபிதா.

வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட இரட்சகரைக் குறித்துச் சொல்லப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களையே அவள் விசேஷவிதமாக விரும்பி வாசித்துக்கொண்டுவந்தாள். இப்படியாகப் பதினைன்றுவயதுநடக்கும்போது பரிசுத்ததனத்திலும், தேவபக்தியிலும் சிறந்துவிளங்கிய அர்ச். சூசையப்பரை விவாகம்புரிந்து எப்போதும் புன்னகைதவழும் வதனத்துடன் சூசையப்பருக்கு வேண்டிய குற்றேவல்களைச் செய்து இருவரும் விரதரும், கன்னியாஸ்திரியுமாய் மாறாத பக்திச்சிரத்தையுடன் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தார்கள்.

இப்படியிருக்கையில் ஒருநாளிரவு தன் சிற்றறையில் செபத்தியானத்திலிருக்கும் மரியாய், தேவசந்நிதானத்தில் நிற்கும் வானதூதரான கபிரியேல் என்னும் காவலர் தனக்குமுன் நிற்பதைக்கண்டு கலங்கினாள். அஞ்சின அவளுக்கு, "அஞ்சாதேயும்" என்று ஆறுதல்கூறிய அவர்: "உமது திருஉதரத்தில் ஒருமகவைக் கர்ப்பந்தரிப்பீர் அவருக்கு யேசு என்னும் நாமம் சூட்டுவீர்" என்றார். இதைக்கேட்ட மரியாய், மனங்கலங்கி: "நான் புருஷன்முகம் அறியேனே! அப்படியிருக்கத் தேவகுமாரன் என்னிடம் எப்படி உற்பவிக்கக்கூடும்" என்றாள். அதற்குத் தூதர் மறுத்தாரமாக: "மரியாயே! மனிதனது உதவியின்றிக் கன்னிமைக்கு யாதொருபழுதும் வராது இஸ்பிரீத்துசாந்துவாகிய சருவேசுரனுடைய தெய்வீக அநுக்கிரகத்தினாலேயாகும்" என்றார். அதற்கு உத்தரமாக இந்த உத்தமி: "உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது" என்றாள். உடனே தேவசுதன் மரியாயின் உதரத்தின் கனியானார். அவளும் கன்னியும், அன்னையுமானாள்.

இப்படியிருக்கையில், உரோமாபுரி அகுஸ்துஸ் இராயன் தன் பிரசைகளையெல்லாம் கணக்கெடுக்க வேண்டுமென்று அவரவர் தங்கள் தங்கள் சொந்த ஊரிலே தங்கள் பெயர்களை எழுதிக்கொடுக்குமாறு கட்டளையிட்டான். கன்னிமரியாயி கருப்பவதியாகி ஒன்பதாம் மாதமாயிருந்தாலும், கட்டளைக்கமைய வேண்டியிருந்ததினால். தேவமாதாவும், சூசையப்பரும் தாவீது இராசாவின் ஊராகிய பெத்லகேமுக்குப் போகவேண்டியதாயிற்று. கணக்கற்ற கஷ்டங்களுக்கிடையில் கருப்பவதியான கன்னிமரியாயைக் கழுதையில் ஏற்றிச் சென்றார் திருப்பத்தா. தங்கயிடமின்றி அலைந்தனர். ஆனால், மாட்டுக்கொட்டில் ஒன்றே பராபரனை மகிமையுடன் வரவேற்றது. அன்றிரவே, ஆனிரைகளின் அருகில் அன்னைமரியின் அரவணைப்பிலே அமலயேசு பிறந்தார்.

# என் அன்னை எங்கே?

அனு. அ.
திருக்குடும்பக் கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.

[தம் ஏகபுதல்வனின் இளமைக்காலம் வீணாகுவதைக்கண்டு உருகினர் பெற்றோர். தந்தையின் மறைவின்பின் — அன்னையின் கண்ணீரின்முன் — பசிப்பிணியின் மத்தியில் தன்தவறை உணர்ந்தான். பொருள் தேடச்சென்று திரும்பியபொழுது ... ?]

யாழ்நகரில் போதியசெல்வம் செல்வாக்குடன் விளங்கியது முதலியார் யேசுதாசனின் குடும்பம். அக்குடும்பத்தின் ஒளியாகத்தோன்றியவன் ஆனந்தன். அவனது மதலைப் பருவத்தில் குதலைமொழிபேசிக் கொஞ்சிமகிழ்ந்தனர் பெற்றோர். உற்றவயதில் கல்விச்சாலைக்கு அனுப்பினர். தங்கள் தள்ளாதவயதில் ஊன்றுகோலாக இருந்து ஆதரித்துக் காப்பாற்றுவான் தம்ஏகபுதல்வன் என்றுஎண்ணிப் பெருமிதங்கொண்டனர். ஆனால், அவர்களின் மனக்கோட்டைகள்யாவும் மணற்கோட்டைகளாகவே மாறின.

துட்டரின் சகவாசத்தை ரசித்த ஆனந்தனுக்குப் பள்ளிப்படிப்பு எட்டிக்காயாகக் கசந்தது. கல்விச்சாலை சிறைக்கைதிகளை அடைத்துவைக்கும் இடம்என்று எண்ணினான். கல்விக்கு முற்றுப்புள்ளிவைத்துவிட்டுக் கலாசாலைக்குப் போகாது ஊர்சுற்றித் திரியவிரும்பினான். உடலுக்கும், உளத்திற்கும் இன்பம்தரும் இயற்கைக் காட்சிகளையும், செயற்கைக் காட்சிகளையும் அனுபவிக்கவிரும்பிச் சினிமாக் கொட்டகைகளையும், வாவிக்கரைகளையும், நாடகமன்றங்களையும் நாடினான். தன்மகன் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தசெய்தி தந்தைக்குத் தெரியவந்தது. நகரத்தில் மக்களால் வெறுக்கப்பட்ட காடையர் கூட்டத்தில் சேர்ந்துகொண்டு எதிர்கால இன்பவாழ்வைப் பாலைவனமாக்கும் தன்மைந்தனைநினைத்து வேதனை ஒருபுறமும், தாம் சேர்த்துவைத்த பணம், சொத்துகள்யாவும் வெகுவிரைவில் சேதமாகப் போகிறதே என்றகவலை மறுபுறமும் அவரை வாட்டியது. வயோதிபகாலத்தில் வேலைசெய்வது மிகவும் கஷ்டமானகாரியம். எனவே, தாம்பேணிப்போற்றிவளர்த்தமைந்தனாவது கல்விகற்று ஒருஉயர்ந்த உத்தியோகத்தில்அமர்ந்து குடும்பத்தைக் காப்பாற்றுவான்என்று எண்ணி மனக்கோட்டைகள்கட்டிய தந்தையும், தாயும் தனயனின் செய்கையால் மனம்நொந்தனர். தன்மகனை எவ்விதமும் நல்வழிக்குக் கொண்டுவர எண்ணியதந்தை அவன்மேல் கூடியஅன்புகாட்டி திருத்தஎண்ணினார். முயற்சி கைகூடாது போனதைக்கண்டு கண்டிப்பால் திருத்த எண்ணினார். ஆனால், ஆனந்தனின் மனதில் தந்தையின் கண்டிப்புகள் யாவும் கேலிப்பேச்சுக்களாகவே பதிந்தன.

ஆனந்தன் துர்க்குணங்களின் இருப்பிடமாக விளங்கினான். காலைச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு சென்றால் இரவு பன்னிரண்டுமணியளவில்தான் வீட்டிற்கு வருவான். திரும்பக் காலையில் புறப்பட்டுவிடுவான். தனது இன்பசுகவாழ்விற்குப் பணம் அவசியம் எனக்கண்ட ஆனந்தன் தன்னைப் பெற்றவர்களிடத்திலேயே திருடஆரம்பித்தான். வருவாய்இன்றிச் செலவு அதிகரித்ததினால் செல்வம்யாவும் கரைந்துகொண்டே சென்றது. கடைசியில் ஆனந்தனின் அன்னையிடம் இருந்த ஒருசோடி தங்கவளையல்களைத்தவிர ஏனைய பொருட்கள்யாவும் செலவழிந்துவிட்டன.

இந்நிலையில் தந்தைமறைந்தார். தந்தையின் மரணத்தின்பின் ஆனந்தனையும், அவன் அன்னையையும் வறுமை அரவணைத்துக் கொண்டது. இதுகாறும் அவனைச் சூழ்ந்துதிரிந்த தோழர்கள் அவனுடைய ஏழ்மைநிலைகண்டு அவனைவிட்டு நீங்கினர். இப்பொழுதுதான் ஆனந்தன் தான் செய்ததவறை உணர்ந்தான். ஆனால், இனிஎன்ன செய்வது? இளமைக்காலத்தில் படிப்பை வீணாக்கிவிட்ட ஆனந்தனுக்கு வேலைகொடுக்க எவரும்முன்வரவில்லை. தன் மிடிமையை நீக்க வழியின்றித் தத்தளித்தான். ஒருநேரச் சோற்றுக்கே அல்லற்படவேண்டிய நிலைஏற்பட்டது. ஆனந்தன் விடாமுயற்சியுடன் வேலைதேடி அலைந்துகொண்டிருந்தான்.

இச்சமயத்தில்தான் இரண்டாவது உலகமகாயுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பிரிட்டிஷாரின் கீழ் இருந்த இலங்கையும் யுத்தத்தில் ஈடுபடவேண்டி இருந்தது. அதனால், பட்டாளத்திற்கு ஆட்களைத்திரட்டினர். வேலைதேடி அலைந்து திரிந்த ஆனந்தனும் பட்டாளத்திற்சேரத் திட்டமிட்டான். இதைஅறிந்ததாய் பிச்சையெடுத்தாலும்பட்டாளத்தில் சேரவேண்டாம் என்று கதறினாள். கையில் நாலுகாசு சம்பாதித்துக்கொண்டு வெற்றியுடன் வீடுதிரும்பி வந்து புதுச்சீவியம் நடத்தலாம் என்று கூறித் தாயைச்சமாதானம் செய்செய்தான். படையில் சேர்வதற்கு முதல் செய்யவேண்டிய ஆயத்தங்களைச் செய்யக்கூடக் கையில்பணமில்லை. கடைசியாக இதுவரை அவள் வைத்திருந்த ஏகசொத்தும், கணவனின் நினைவுச்சின்னமுமாகிய அந்தத் தங்கவளையல்களை எடுத்து மகனிடம் கொடுத்து ஆசீர்வதித்து அனுப்பினாள்.

கண்களில் நீர்சொரிய அன்னையிடமிருந்து தங்கவளையல்களைப் பெற்றுக்கொண்ட ஆனந்தன் விரைவில் பணம் அனுப்புவதாகவும், செல்வம் செல்வாக்குடன் வீடுதிரும்புவதாகவும்கூறி அன்னையின் ஆசியேற்று படையில் சேர்ந்தான். முதலில் ஆனந்தன் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டுப் பின்னர் எகிப்திற்குச் சென்றான். போரின் அகோரத்தில் உலகம்முழுவதும் ஆழ்ந்துகிடந்தது. யுத்தம் மிகவும் மும்முரமாக நடைபெற்றுக்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

---

இப்படியாக நித்திய பிதாவானவர் மானிடக்குழந்தையாய் உலகில் அவதாரம் செய்ய மாடமாளிகையாய் மாடாடுறையும் ஓர் மாட்டுத்தொழுவத்தையே தெரிந்துகொண்டார். அப்படி அவதரித்த திவ்விய பாலகனும் பஞ்சணைமெத்தையிலல்ல, புல்லணையிலே வளர்த்தப்படுகிறார். அரசர்களுக்கல்ல, அறிவாளர்களுக்கல்ல, பணம்படைத்த பணக்காரர்களுக்கல்ல, ஏழை ஆயர்களுக்கே முதன்முதல் அறிவிக்கப்பட்டது. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஞானம் மிகப்பெரிதாகும் ஆகவே, நாமும் அந்த மாசற்ற மரியைத் தினமும் இரந்து மன்றாடுவோமாக.

M. B. பிலோமினா செல்வம்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 4-1959.